வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு
Eelanadu வார மலர் ஈழநாடு

விலை ரூ. 30/=


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 05.04.2026 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 89 | பக்கங்கள் : 16

## அமைதியை நோக்கிய பாதை மலரவேண்டும்!

### ஈஸ்டர் வாழ்த்தில் ஜனாதிபதி



கொழும்பு, ஏப். 05

உன்னதமான உயிர்த்த ஞாயிறு தினத்தில் அமைதியை நோக்கிய பாதை மலர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தினை முன்னிட்டு நாட்டு ஜனாதிபதி மக்களுக்கு வாழ்த்து செய்தி வெளியிட்டுள்ளார்.

அந்த வாழ்த்து செய்தியில் அவர் தெரிவித்தாவது-

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நினைவு கூர்ந்து, இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் மிகுந்த பக்தியுடன் உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடுகின்றனர்.

இது, நம்பிக்கை, புதிய மாற்றம் மற்றும் கருணையின் நித்திய சக்தியை நினைவூட்டுகின்றது. 15

# மின்சாரக் கட்டணம் மீண்டும் உயரலாம்!

### கடினமான நிலை ஏற்படும் அபாயம்

கொழும்பு, ஏப். 05

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நெருக்கடி காரணமாக எதிர்வரும் காலப் பகுதியில் மின்சாரக் கட்டணம் மீண்டும் உயர்வடையும். அது கடினமானதாகவும் அமையும் என மின்சாரத்துறை மறுசீரமைப்பு செயலக அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் புபுது நிரோஷன் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எரிபொருள் தட்டுப்பாடு, வறட்சியான காலநிலை மற்றும் நிலக்கரி தட்டுப்பாடு ஆகிய காரணிகளால் மின் கட்டணம் தற்போது அதிகரிக்கப்படவில்லை.

மின் கட்டண திருத்தம் தொடர்பில் மூன்று மாதங்களுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட திருத்த யோசனைக்கு அமைவாகவே தற்போது 10 வீதத்தால் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் நெருக்கடி காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் மின் கட்டணம் மீண்டும் உயர்வடையும். அது கடினமானதாகவும் அமையும்.

ஆகவே மின்கட்டண அதிகரிப்பால் ஏற்படும் நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்வதற்கு மாற்று நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை மேம்படுத்துவதற்கு புதிய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. 15

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரியை கண்டறிந்தால் ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பியுங்கள்!

### கூறுகின்றார் சுகீஸ்வர பண்டார

கொழும்பு, ஏப். 05

அமெரிக்கா உள்ளிட்ட உலகின் வல்லரசு நாடுகளாலும், 5 ஜனாதிபதி ஆணைக்குழுக்களாலும் கண்டுபிடிக்க முடியாமல் போன உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையான சூத்திரதாரியை குற்றப்புலனாய்வுத்திணைக்களம் கண்டுபிடித்திருக்குமாயின், அந்தத் தகவல்களை ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு புதிய மக்கள் முன்னணியின் தலைவர் சுகீஸ்வர பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச புலனாய்வு பிரிவின் முன்னாள் பிரதானி 15

## ஈரான் இராணுவத்தின் வலிமை இன்னும் முற்றாக அழியவில்லை

### அமெரிக்க உளவுப் பிரிவு அறிக்கை

வாஷிங்டன், ஏப். 05

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தொடுத்துவரும் கூட்டு தாக்குதல்களில் அந்நாட்டின் இராணுவ வலிமையை இன்னும் முழுமையாக அழிக்கவில்லை என்று அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் உரிய தரப்புகளுக்கு உளவுத்துறை அறிக்கையிட்டுள்ளது என சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. 15

## வடக்குக்கான ரயில் சேவைகள் 9ஆம் திகதி முதல் மீள ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 05

வடக்குக்கான ரயில் சேவைகள் எதிர்வரும் 09ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண ரயில் நிலையப் பொறுப்பதிகாரி தி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

மஹவ முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதையில் ஐந்து ரயில் பாலங்களை மாற்றியமைக்கவும், யானைகள் கடந்து செல்வதற்காக அமைக்கப்பட்ட சுரங்கப் பாதையை புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ளவும் ஏதுவாக வடக்குக்கான ரயில் சேவைகள் 15

## ஈரானுக்கு 48 மணிநேர காலக்கெடு!

வாஷிங்டன், ஏப். 05

அமெரிக்காவுடன் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு ஈரானுக்கு மேலும் 48 மணி நேரம் கால அவகாசம் உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ட்ரூத் சமூக வலைத்தளத்தில் அவர் இட்டுள்ள பதிவில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு அல்லது ஹோர்முஸ் நீரிணையைத் திறப்பதற்கு ஈரானுக்கு நான் பத்து நாள்கள் அவகாசம் 15

## தீர்வு கிடைக்காவிடின் தொடர்ந்து போராட்டம்

### பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 05

பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

பெற்றோலிய விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடிகள் அதிகரிப்பு உள்ளிட்ட 15

## இலங்கைக்கு ரஷ்ய எண்ணெய் கிடைப்பதில் தொடரும் இழுபறி

கொழும்பு, ஏப். 05

இலங்கைக்கு ரஷ்யாவிலிருந்து மசகு எண்ணெய் கிடைப்பதில் தொடர்ந்தும் இழுபறி நிலை நீடிப்பதாகத் தெரியவருகிறது.

இதற்கான போக்குவரத்து மற்றும் ஏனைய ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் இன்னும் நிறைவடையாத நிலையில், அமெரிக்கா வழங்கிய ஒரு மாத கால தடையில்லா விலக்கு எதிர்வரும் ஏப்ரல் 11ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

அமெரிக்கா - இஸ்ரேல் மற்றும் ஈரான் 15

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதியான தீர்ப்பு பெற்றுக் கொடுப்போம்!

### ஜெகதீஸ்வரன் எம்.பி. உறுதி



வவுனியா, ஏப். 05

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற ரீதியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீதியான தீர்ப்பை சட்ட ரீதியான விசாரணைகள் மூலமாக எமது காலப் பகுதியில் பெற்றுக்கொடுப்போம். இதில் பலரது முகமூடிகள் 15

## போக்குவரத்து துறையை வலுப்படுத்த இலங்கை - பெலாரஸ் இடையே பேச்சு!

கொழும்பு, ஏப். 05

ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க உள்ளிட்ட இலங்கை பிரதிநிதிகள், பெலாரஸ் போக்குவரத்து அமைச்சர் அலெக்ஸி லியாக்னோவிச்சை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான போக்குவரத்துத் துறை ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, இரு நாட்டு மக்களிடையேயான போக்குவரத்துத் தொடர்புகளை இலகுபடுத்தும் நோக்கில், புதிய விமான சேவை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வவுனியாவில் புதைத்த சடலத்தின் தலை மர்ம நபர்களால் அகற்றம்!

வவுனியா, ஏப். 05

வவுனியா - மகாறம்பைக்குளம் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த சடலம் ஒன்றின் தலை மர்ம நபர்களால் துண்டிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டது.

மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர், மூன்று மாதங்களுக்கு முன்னர் அகால மரணமடைந்தார்.

அவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் கருப்பணிச்சான் குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், குறித்த சடலம் புதைக்கப்பட்ட இடத்தை யாரோ மர்ம நபர்கள் மீண்டும் தோண்டி, அதிலிருந்த தலையை மட்டும் அகற்றிச் சென்றதாக உயிரிழந்தவரின் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர்.

அதே மயானத்தில் அண்மையில் இடம்பெற்ற வேறொருவரின் இறுதிச் சடங்கின் போது, அப்பகுதியில் இருந்து வீசிய துர்நாற்றம் காரணமாகவே இவ்விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

துர்நாற்றம் வீசிய இடத்தை பொதுமக்கள் சென்று பார்வையிட்ட போதே, சடலம் தோண்டப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து வவுனியா குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# 25ஆயிரம் தொன் உரம் இன்று நாட்டுக்கு வரும்

## பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன

கொழும்பு, ஏப். 05

25 ஆயிரம் தொன் உரத்தை ஏற்றிய கப்பலொன்று இன்று நாட்டை வந்தடையவுள்ளது என்று விவசாயம் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்தார்.

உலகளாவிய நிலையில் தற்போது உருவாகியுள்ள உரப் பிரச்னையை அரசாங்கத்தால் வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், விவசாயிகளிடையே உரப் பிரச்னை குறித்த கவலைகள் காணப்பட்ட போதிலும், நாட்டில் தற்போது தேவையையும் விட அதிகளவில் சேற்று உரம் மற்றும் பண்டி உரம் கையிருப்பில் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

யூரியா உரம் தொடர்பில் ஒரு சிறிய சிக்கல் காணப்படலாம் என்றாலும், தற்போது நாட்டில் ஒரு இலட்சம் தொன்களுக்கு நெருக்கமான கையிருப்பு உள்ளது. நெற்செய்கைக்குத் தேவையான 80, 000 தொன்களுடன் ஒப்பிடுகையில் இது போதுமானது என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

உப பயிர்கள் மற்றும் மேலதிக பயிர்ச்செய்கைகளைக் கருத்தில் கொள்ளும்போது மேலதிகத் தேவைகள் ஏற்படக்கூடும் என்பதால், அதனைப் பூர்த்தி செய்வதற்காகவே இன்று 25000 தொன் உரம் அடங்கிய கப்பல் நாட்டை வந்தடையவுள்ளது. மேலும், பல உரக் கப்பல்களைக் கொண்டுவருவதற்கு ஏற்கனவே கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (எ)

## அரச மருத்துவ அதிகாரிகளின்

# பணிப்புறக்கணிப்பு அடிப்படையற்ற ஒன்று

கொழும்பு, ஏப். 05

மருத்துவ பயிற்சிகளை நிறைவு செய்த மருத்துவர்களுக்கு நியமனம் வழங்கும் நடைமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முன்னெடுத்துள்ள பணிப்புறக்கணிப்பானது, பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கூட அடிப்படையற்ற ஒன்று என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

எனவே இதில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படின், நோயாளிகளின் உயிரைப் பணயம் வைக்காமல், நீதிமன்றத்தின் ஊடாக பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளுமாறு அவர் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

“நியாயமான காரணங்களுக்காகப் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படுமாயின் எம்மால் பேச்சுவார்த்தை நடத்த முடியும். ஆனால், இது விவாதிப்பதற்குக்கூட விடயம் ஏதுமில்லாத - அடிப்படையற்ற ஒரு பணிப்புறக்கணிப்பாகும்.

என்னுடன் பிரச்னை இருக்குமாயின் எனக்குச் சவால் விடுங்கள். அதற்குச் சிறந்த வழி நோயாளிகளின் உயிர்களை இதில் சிக்க வைக்காமல் அவர்களை இதிலிருந்து விடுவிப்பதாகும்.

பயிற்சி நியமனங்களை வழங்குவது சட்டவிரோதமானது எனக் கருதினால், சிறந்த வழி எனக்கு எதிராக நீதிமன்றம் செல்வதாகும். அப்போது நான் ஒரு தரப்பாகவும், நீங்கள் ஒரு தரப்பாகவும் இருந்து இந்தப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முடியும். எனவே, அமைச்சருடன் உள்ள முரண்பாட்டுக்காக மக்கள் மீது பாரத்தைச் சுமத்த வேண்டாம்”- எனத் தெரிவித்தார்.

இதேவேளை, பயிற்சி மருத்துவர்கள் அரசாங்க சேவையில் இணைவதற்காக விண்ணப்பிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நேற்று நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்த நிலையில், அதனை எக்காரணம் கொண்டும் நீடிக்கப் போவதில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இனி தாமதமாக விண்ணப்பித்தாலும் அரசாங்க மருத்துவமனைகளில் பணியாற்றுவதற்கோ அல்லது சம்பளம் பெறுவதற்கோ வாய்ப்பு கிடைக்காது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 557 பேர் கைது!

கொழும்பு, ஏப். 05

நாடளாவிய ரீதியில் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 557 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 27, 123 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 18 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 177 பேரும் திறந்த பிடியாணைகளுக்கமைய 114 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 136 பேரும் கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 87 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,956 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வவுனியாவில் கஞ்சாவுடன் இரண்டு பொலிஸார் கைது!

வவுனியா, ஏப். 05

வவுனியாவில் கஞ்சாவுடன் இரண்டு பொலிஸாரை கைது செய்ததாக இரட்டைபெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை இரட்டைபெரியகுளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விற்பனைக்காக ஒரு கிலோ 970 கிராம் கஞ்சாவை கொண்டு சென்ற வேளை இரண்டு பொலிஸாரையும் கைது செய்ததுடன், அவர்களிடம் இருந்த கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் முன்னிலை ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்ப ட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் சாய்ந்தமருது மற்றும் மஸ்கெலியா ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




# 3 ஏ சித்திகளை பெற்ற மாணவன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஏப். 05

கடந்த வருடம் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் கணித பிரிவில் 3ஏ சித்திகளை பெற்ற மாணவன் ஒருவர் உடல்நல குறைவால் உயிரிழந்தார்.

இணுவில் பகுதியைச் சேர்ந்த யாழ். இந்துக்கல்லூரி மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

அண்மையில் வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறுகளில் 3ஏ பெறுபேறுகளை பெற்று, யாழ். மாவட்ட மட்டத்தில் 24ஆவது இடத்தை பெற்ற மாணவன் திடீர் உடல் நல குறைவால் உயிரிழந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ)

# மலையக பல்கலைக்கழகம் அமைக்க புதிய குழுவை உருவாக்க தீர்மானம்

நுவரெலியா, ஏப். 05

மலையகத்தில் பல்கலைக்கழகம் அமைக்க புதிய குழுவை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு புதிய பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ வேண்டிய அவசியம் குறித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்று மலையக மக்கள் சக்தி அமைப்பின் தலைவர் ராமன் செந்தூரன் தலைமையில் கொட்டக்கலை-கெமர்ஷல் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பல ஆண்டுகளாக மலையக மக்கள் முன்வைத்து வரும் இந்த கோரிக்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கில், கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து விரிவான கருத்துக்களை இக்கூட்டத்தில் பரிமாறிக் கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ராமன் செந்தூரன், பேராதனை போன்ற முன்னணி பல்கலைக்கழகத்தின் கிளையாகவோ அல்லது தனித்துவமான பல்கலைக்கழகமாகவோ இதை அமைப்பது தொடர்பில் அரசின் கவனத்தை ஈர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மலையகப் புகுதிகளில் இருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகின்ற போதிலும், அவர்கள் தூர இடங்களுக்கு சென்று கல்வி கற்க வேண்டிய நிலை காரணமாக அதிக செலவுகள் மற்றும் தங்குமிட வசதி பற்றாக்குறை போன்ற பிரச்னைகள் பெரும் தடையாக உள்ளன.

இந்த திட்டத்தை முறையாக முன்னெடுக்க சிறப்பு குழுவொன்றை அமைக்கவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இந்த குழு மூலம் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்கான தகுந்த இடத்தைத் தெரிவுசெய்தல், தேவையான சட்ட அமைப்பை உருவாக்குதல் மற்றும் ஆய்வுகளுடன் கூடிய விரிவான திட்ட அறிக்கையை தயாரித்தல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த தேவையை நிறைவேற்ற, கட்சி வேறுபாடுகள் இன்றி மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் பொதுமக்களை ஒன்றிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரச மருத்துவ அதிகாரிகள் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப். 05

இடமாற்ற நடைமுறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்னைகளைச் சுட்டிக்காட்டி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மீண்டும் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நாடளாவிய ரீதியில் உள்ள மருத்துவமனைகளில் முன்னெடுக்கப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் பிரபாத் சுகததாஸ தெரிவித்தார்.

இதேவேளை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பேச்சுவார்த்தைகளை நடத்த அதிகாரிகள் தயாராக் இருப்பதாக சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

எனினும், தனது அதிகார வரம்புக்கு அப்பாற்பட்ட விடயங்களில் உத்தரவாதம் அளிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

இதே விவகாரம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. (எ)

## பணிப்பகிஷ்கரிப்புக்கு விசேட மருத்துவர்கள் ஆதரவில்லை!

கொழும்பு, ஏப். 05

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுக் காலை முதல் ஆரம்பித்துள்ள பணிப்பகிஷ்கரிப்புக்கு தங்களது ஆதரவு இல்லையென்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

விசேட மருத்துவ நிபுணர்கள் வழமை போன்று தங்களது கடமைகளை முன்னெடுப்பார்கள் எனவும், மருத்துவமனைகளின் விசேட மருத்துவ சேவைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் எனவும் அந்த சங்கத்தின் செயலாளர் ஆர். ஞானசேகரம் தெரிவித்தார்.

அத்துடன், மேலதிக பயிற்சி பெறும் விசேட மருத்துவர்களும் இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என அவர் கூறினார்.

விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கத்தில் சுமார் 2,300 மருத்துவர்கள் உள்ளதாகவும், அவர்கள் அனைவரும் வழமை போன்று கடமைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவித்த ஞானசேகரம், ஒரு கொள்கை ரீதியாக விசேட மருத்துவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவித்தார்.

விசேட மருத்துவர்களுக்கும் பல்வேறு பிரச்னைகள் உள்ள போதிலும், நோயாளிகளின் உயிரைப் பணயம் வைத்துப் போராட்டத்தில் ஈடுபடுவது தங்களது கொள்கையல்ல என அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்னைகள் குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும், சில பிரச்னைகளுக்கு இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை.- என்றார்.

மருத்துவர்களின் நியமனப் பட்டியல் மற்றும் இடமாற்றப் பட்டியலில் அரசியல் தலையீடுகள் ஊடாக முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கூறி, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்று முதல் நாடு தழுவிய ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை ஆரம்பித்துள்ளது. (எ)

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

அநுராதபுரம், ஏப். 05

அநுராதபுரம் பிரதேச குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, பெருமளவிலான ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வெள்ளிக்கிழமை மாலை அநுராதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரவெவ ஏரிக்கு அருகில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 106 கிராம் 530 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 103 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (எ)

## இந்திய தருமை ஆதீனம் சுவாமிகள் யாழ். வருகை



யாழ்ப்பாணம், ஏப். 05

இந்திய தருமை ஆதீனம் 27 ஆவது குருமகா சந்திதானம் சிறீல சிறீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரும் சுவாமிகள், தருமை ஆதீன சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம் நடத்தி வரும் சைவ சித்தாந்த பட்டப்படிப்பு அலகினை இலங்கையில் உள்ளவர்களும் கற்றுத் தேறும் வண்ணம் அறிமுகம் செய்து ஆரம்பித்து வைக்கிறார்.

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் கற்கை நெறிக்கான அனுசரணையை வழங்குகின்றனர். கற்பித்தலில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பங்கேற்கின்றனர்.

தருமை ஆதீன சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் இலங்கைக்கான இணைப்பாளராக சிவப்பிரியாவை, சுவாமிகள் நியமனம் செய்கிறார். (எ)

## கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் நீர்வெட்டு

கொழும்பு, ஏப். 05

நாட்டில் நிலவும் வறட்சியான வானிலை காரணமாக கொழும்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்படும் நீர்வெட்டு நேற்றும் தொடர்ந்தது.

நுகர்வோரின் கோரிக்கைகளை கருத்தில்கொண்டு, திட்டமிடப்பட்ட நீர் விநியோக தடையை 24 மணித்தியாலங்களில் இருந்து 18 மணித்தியாலங்களாக குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, கால அட்டவணைக்கு அமைவாக எதிர்வரும் 10ஆம் திகதி வரை அந்த பகுதிகளில் அவ்வப்போது நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படவுள்ளது.

பாதுக்கை, ஹோமாகம, பெலன்வத்தை மற்றும் பன்னிப்பிட்டிய உள்ளிட்ட சில பகுதிகளில் இந்தத் திட்டமிடப்பட்ட நீர்வெட்டு அமுல்படுத்தப்படுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. (எ)

## வாள்வெட்டுடன் தொடர்புடைய இளைஞன் கைக்குண்டுடன் கைது

யாழ்ப்பாணம், ஏப், 05

யாழ்ப்பாணம்- பண்ணை பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களில் ஒருவர், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டார்.

கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனே, மருதனார்மடம் பகுதியில் வைத்து நேற்று முந்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைக்குண்டுடன் கைது செய்யப்பட்ட அவர், மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார்.


கடந்த 26ஆம் திகதி பண்ணை பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி, அவரைக் காயப்படுத்தியதுடன் மோட்டார் சைக்கிளையும் கொள்ளையிட்டு சென்ற கும்பலில் ஒருவராக இவர் செயல்பட்டமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் வன்முறைக் கும்பல் ஒன்றின் முக்கிய உறுப்பினராகச் செயல்படும் இந்த இளைஞனுக்கு அண்மையிலேயே திருமணம் நடைபெற்றதுடன், அவர் தற்போது மருதனார்மடம் சந்தையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## வில்பத்து தேசிய பூங்காவில் பாரிய உடும்பு வேட்டை!

சந்தேகநபர் ஒருவர் கைது



அநுராதபுரம், ஏப். 05

வில்பத்து தேசிய பூங்காவின் குக்குல்கடுவ பிரிவு அலுவலக அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, வேட்டையாடப்பட்ட உடும்பு மற்றும் துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 02ஆம் திகதி அம்பகஹவெவ பகுதியில் வேட்டையில் ஈடுபட்டிருந்த போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 61 வயதுடையவர் என்பதோடு, அவரிடமிருந்து சுமார் 03 அடி நீளமான உயிரிழந்த உடும்பு மற்றும் ஒரு துப்பாக்கி என்பன கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவரை நாளை 06ஆம் திகதி நொச்சியாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## ஹெரோயின் கடத்திய பெண் 9 கோடி ரூபாயுடன் சிக்கினார்

கொழும்பு, ஏப். 05

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த 9 கோடியே 37 இலட்சத்து 62 ஆயிரத்து 939 ரூபாய் பணத்தை இரண்டு வங்கிகளில் வைப்புச் செய்திருந்த போதைப்பொருள் கடத்தல்காரி ஒருவரை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் கைது செய்தனர்.

பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயது பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பணச் சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதுடன், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (எ)

## புனர்வாழ்வு நிலையத்திலிருந்து நான்கு கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஏப். 05

கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து நான்கு கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்த கைதிகள் புனர்வாழ்வு நிலையத்தின் பாதுகாப்பை மீறி தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடிய கைதிகளை கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து விசேட தேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஊழல் மோசடியை மறைக்க அமைச்சர் கடும் முயற்சி!

## சானக்க எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 05

தரம் குறைந்த நிலக்கரியை நாட்டுக்கு இறக்குமதி செய்தமை தொடர்பான அறிக்கையை பகிரங்கப்படுத்தாமல் இருக்க வலுசக்தி அமைச்சர் கடும் முயற்சி எடுத்து வருகிறார் என்று பாராளுமன்ற உறுப்பினர் டி. வி. சானக்க தெரிவித்தார்.

குறித்த அமைச்சர் ஐந்து நாட்களுக்கும் மேலாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் தங்கியிருந்து சதித்திட்டங்களை தீட்டி வருவதாகவும் அவர் வெளிப்படுத்தினார்.

“நிலக்கரி மோசடியானது இந்த அரசாங்கத்தின் ஒரு பாரிய மோசடியாகும். இந்த நிலக்கரி மோசடியால் நாட்டின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது. புத்தாண்டு காலம் நெருங்குகிறது, புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு ஜெனரேட்டர்களைப் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், அந்த ஜெனரேட்டர்களுக்கான எரிபொருளையும் அரசாங்கமே கொண்டு வர வேண்டியுள்ளது.

நிலக்கரி மோசடியை மூடிமறைக்க இன்று மின்சாரக் கட்டணச் சுமையை மக்கள் மீது சுமத்தியுள்ளனர். நுரைச்சோலை தொடர்பான முதல் அறிக்கை ஜனவரி 02ஆம் திகதி வெளியானது, ஆனால் மூன்று மாதங்கள் கடந்தும் வலுசக்தி அமைச்சர் அங்கு செல்லவில்லை. எனினும், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்ட பின்னர், அமைச்சர் இப்போது நுரைச்சோலையில் தங்கியிருந்து அந்த மோசடியை மறைக்க முயற்சி செய்கின்றார்.

அறிக்கைகளை வெளியிடாமல், தனது நெருங்கிய நண்பர் ஒருவரைப் பயன்படுத்தி இந்த மோசடியை மூடிமறைக்க அமைச்சர் பெரும் முயற்சி எடுத்து வருகின்றார். இப்போது அரசாங்கம் ஊழல் நடந்துள்ளது என்பது போலக் கூற முனைந்தாலும், அந்தத் தவறு தங்களுடையது அல்ல என்று கூறவே முயற்சிக்கின்றது. நாட்டில் பல்வேறு மோசடிகள் நடக்கின்றன, இவை அனைத்துக்கும் எதிராக இப்போது கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன, பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.”- என்றார்.

(எ)

# நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்

கொழும்பு, ஏப். 05

நாட்டின் பெரும்பாலான பகுதிகளின் பல இடங்களில் பிற்பகல் ஒரு மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களின் சில இடங்களில் 75 மில்லி மீற்றரிலும் கூடிய ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும்.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அம்பாந்தோட்டை தொடக்கம் பொத்துவில், மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையான கடல் பிராந்தியங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்திற்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் தென் மேற்கு திசையிலிருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும்.

ஆனால், இடியுடன் கூடிய மழை பெய்கின்ற சந்தர்ப்பங்களில் பலத்த காற்று வீசுவதுடன் அவ்வேளைகளில் கடல் பிராந்தியங்கள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

மத்திய கிழக்கு போர் தாக்கம்:

# தென்னை உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி பாரியளவு பின்னடைவு

கொழும்பு, ஏப். 05

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் போர் பதற்றமான சூழ்நிலை காரணமாக இலங்கையின் தென்னை சார்ந்த உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது என்று தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நயனி ஆராச்சிகே தெரிவித்தார்.

இதன் காரணமாக தென்னை உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதி மூலம் வருடாந்தம் ஈட்டப்படும் 1,200 மில்லியன் முதல் 1,800 மில்லியன் அமெரிக்க டொலர் வரையிலான வருமானம் இந்த ஆண்டில் கணிசமாக குறையக்கூடும். துருவிய தேங்காய், தேங்காய் பால் மற்றும் தேங்காய் பால் மா போன்ற உற்பத்திகளுக்கான பிரதான சந்தையாக மத்திய கிழக்கு நாடுகள் விளங்குகின்றன. ஆனால், தற்போதைய போர்ச் சூழலால் இந்த நாடுகளுக்கான ஏற்றுமதியில் தடைகள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் கப்பல் கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் காரணமாக உள்நாட்டு உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்வதில் பெரும் சவால்கள் ஏற்பட்டுள்ளன.

உள்நாட்டுக்குள், தொழில்துறைப் பகுதியில் எரிபொருள் விலை உயர்வினால் உற்பத்தி செலவில் மிகப்பெரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் தென்னை உற்பத்தியில் நூற்றுக்கு நூறு சதவீதமும் மத்திய கிழக்கு சந்தையையே சார்ந்துள்ளது. இந்த நிலைமையை கருத்திற்கொண்டு எஞ்சியுள்ள தேங்காய்களை உள்நாட்டு எண்ணெய் உற்பத்திக்கு அதிகளவில் பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. - என்றார்.

(எ)

# கொழும்பு புறநகரில் நீரின்றி தவிக்கும் 500 குடும்பங்கள்!

கொழும்பு, ஏப். 05

வறட்சியான வானிலையுடன் கொட்டாவை - ருக்மல்கம வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த சில நாட்களாக நீர் கிடைக்காமல் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சூழலில், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட சில நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு அந்தந்த வீடுகளுக்கு நீர் வழங்கப்பட்ட போதிலும், சில தாங்கிகளுக்கு இதுவரை நீர் கிடைக்கவில்லை என பிரதேசவாசிகள் கூறினர்.

அதிகரித்த கேள்வி காரணமாக சில தாங்கிகளில் நிரப்பப்படும் நீர், அரை மணித்தியாலத்துக்குள்ளேயே தீர்ந்து விடுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

(எ)

# முதியவர் ஒருவர் கொலை: சந்தேகநபர் தலைமறைவு!

கொழும்பு, ஏப். 05

பல்லெவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாந்துராகொட பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு 60 வயது முதியவர் ஒருவர் கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)

# விபத்தில் சிக்கிய ஊடகவியலாளர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 05


வீதி விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில், கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த ஊடகவியலாளர் பக்தி தர்மப்பிரிய மெண்டிஸ் தனது 47 ஆவது வயதில் நேற்றுக்காலை காலமானார்.

பக்தி தர்மப்பிரிய மெண்டிஸ் 2000 ஆம் ஆண்டில் ‘லக்பிம’ தினசரி பத்திரிகையின் ஆரம்பகால ஆசிரியர் குழு உறுப்பினராக தனது ஊடக பயணத்தை ஆரம்பித்தார்.

பின்னர் அவர் தனது ஊடக வாழ்க்கையில் ‘தினமின’ மற்றும் ‘ரிவிர’ ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றினார்.

(எ)

# அமெரிக்க போர் விமானம்மீது ஈரான் ஏவுகணை தாக்குதல்!



தெஹ்ரான், ஏப். 05

அமெரிக்காவின் ஏ-10 ரக விமானம் மீது ஈரானிய பாதுகாப்புப் படையினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி அதனை சுட்டு வீழ்த்தினர்.

ஹோர்முஸ் நீரிணைக்கு அருகிலுள்ள வான்பரப்பில் வைத்து இந்த விமானம் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதுடன், தாக்குதல் நடத்தப்பட்டவுடன் அதன் விமானி பரசூட் மூலம் வெளியேறி உயிர் தப்பினார்.

ஈரானினால் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்ட எவ்-15 போர் விமானத்தின் விமானியைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த விமானமே இவ்வாறு தாக்குதலுக்குள்ளானது.

(எ)

# அனுமதிப்பத்திரமின்றி மண்ணெண்ணெய் கடத்திய இருவர் கைது

மொனராகலை, ஏப். 05

மொனராகலை - செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தண்டுவ பகுதியில், அனுமதிப் பத்திரமின்றி லொறி ஒன்றில் ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயை கொண்டு சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

செவனகல பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, வெள்ளிக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட அதிரடிச் சோதனையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 39 மற்றும் 49 வயதுடையவர்கள் எனவும் செவனகல பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டனர்.

(எ)

# கால்வாயில் நீராடச்சென்ற சிறுவன் நீரில் மூழ்கி பலி!

திருகோணமலை, ஏப். 05

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேராதுவேலி பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் நீராடச் சென்ற சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

வெள்ளிக்கிழமை காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கந்தளாய் பேராதுவேலி பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவன் தனது நண்பர்கள் மூவருடன் இணைந்து கால்வாயில் நீராடிக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. சம்பவம் தொடர்பில் கந்தளாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

விசுவாவசு வருடம், பங்குனி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தமிழ்நாட்டு தேர்தல் களம்

தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் பிரசாரங்கள் தீவிரமடைந்திருக்கின்றன. ஆறு தசாப்தங்களாக திராவிட இயக்கத்தின் இரு பிரதான கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகமும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாறிமாறி மாநிலத்தை ஆட்சி செய்து வந்திருக்கின்ற போதிலும், அவை பெரும்பாலும் மற்றைய அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே தேர்தல்களைச் சந்தித்து வந்திருக்கின்றன.

தேர்தல் கூட்டணி அரசியல் இந்த தடவை அதன் உச்சத்தில் இருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தி.மு.க.வும் அண்ணா திமு.க.வும் முன்னைய தேர்தல்களை விடவும் கூடுதல் எண்ணிக்கையான கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றன. தி.மு.க.வின் கூட்டணியில் இந்திய காங்கிரஸ்/ம் அண்ணா தி.மு.க. கூட்டணியில் பாரதிய ஜனதா கட்சியும் பிரதான தேசியக் கட்சிகளாக இருக்கின்றன.

இவ்விரு திராவிட இயக்க கட்சிகளும் அறுபது வருடங்களாக மாநிலத்தை ஆட்சி செய்த இலட்சணத்தை அவை இந்த தடவை தேர்தல் அறிக்கைகளில் வாக்குறுதி அளித்திருக்கும் “இலவசங்களினதும்” பணக்கொடுப்பனவுகளின் பட்டியல்கள் அம்பலப்படுத்தி நிற்கின்றன.

திராவிட இயக்கத்தின் ஆட்சிகள் தமிழ்நாட்டு மக்களில் பெரும்பான்மையானவர்களின் வாழ்க்கைத் தரங்களை குறிப்பிடத்தக்க உயர்த்தியிருந்தால் திமு.க. தலைவரான முதலமைச்சர் மு.க. ஸ்ராலினும் அண்ணா தி.மு.க. தலைவர் எடப்பாடி பழனிச்சாமியும் தாங்கள் வெற்றி பெற்றால் இலவசங்களை வழங்குவதாக ஏட்டிக்குப் போட்டியாக அறிவிப்புக்களைச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

தமிழ்நாட்டு அரசியலில் சினிமாவின் செல்வாக்கை தடுக்க முடியாது என்ற போதிலும், பல வருடங்களுக்கு பிறகு சினிமா நடிகர் ஒருவரின் செல்வாக்கு தேர்தல் முடிவுகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை ஜோசப் விஜயின் அரசியல் பிரவேசம் ஏற்படுத்தியிருக்கிறது.

அரசியலுக்கு வரும் சகல சினிமா நடிகர்களையும் எம். ஜி. ஆருடன் ஒப்பிட முடியாது என்ற போதிலும், அண்மைய காலத்தில் அரசியலில் பிரவேசித்தவர்களில் ஓரளவுக்கேனும் கணிசமான வாக்கு வங்கியை தன்வசம் வைத்திருந்தவர் எனறால் விஜயகாந்தைக் கூறலாம். ஆனால், அவரும் தனது இறுதிக்கால குழப்பகரமான நடத்தைகள் மூலமாக தனது கட்சியை ஒரு உதிரிக்கட்சியாக்கி விட்டே மறைந்து போனார்.

தற்போது விஜயின். தமிழக வெற்றிக் கழகத்தின் பிரசாரக் கூட்டங்களில் திரளும் மக்கள் கூட்டம் மாநிலத்தின் பிரதான கட்சாகளை தடுமாற வைத்திருப்பது உண்மைதான். விஜயகாந்தைப் போன்றே விஜயும் தனது முதன் முதலான தேர்தல் களப் பரீட்சைக்கு எந்த கட்சியுடனும் கூட்டணி சேராமல் தனியாக முகங்கொடுக்கிறார்.

அவருக்கு இருப்பதாக கருதப்படும் மக்கள் செல்வாக்கு மாநிலத்தில் மும்முனைப் போட்டிக்கு களம் அமைக்குமா அல்லது இரு பிரதான திராவிட இயக்கக் கட்சிகளின் வாய்ப்புக்களில் எந்தளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதே இன்று எழுகின்ற முக்கியமான கேள்வி.

தி.மு க. அதன் வரலாற்றில் ஒருபோதுமே அடுத்தடுத்து இரு பதவிக் காலங்களுக்கு ஆட்சியில் இருந்ததில்லை. அந்த போக்கை இந்த தடவை தேர்தல் மாற்றியமைக்குமா என்பதும் அண்ணா தி.மு.க.வின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒன்றாக தேர்தல் அமையுமா என்பதும் அடுத்த முக்கியமான கேள்வி.

# உயிர்ப்பின் சாட்சிகள்



மூன்றாம் உலகப்போர் வெடிக்குமா என்ற ஏக்கத்துடன் வாழுகின்றது மனித சமூகம். உலகளாவிய ரீதியில் இன, மத, மொழி வேற்றுமை என்னும் தீப்பிளம்பு இன்றைய காலகட்டத்தில் சுவாலை விட்டு எரிகின்றது. மனிதன் தன் சக மனிதனுக்கு அந்நியனாகின்றான். ஓர் இனம் இன்னொரு இனத்தின் எதிரியாகின்றது.

ஆண்டவர் இயேசு மனிதரை மீட்பதற்காக இவ்வுலகிற்கு வந்தவர், அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம், சுதந்திரம் என்றெல்லாம் பேசியவர், தனது வாழ்வை இளமையிலேயே கையளிக்க வேண்டியவரானார்.

ஒருவிதை மண்ணில் வீழ்ந்து மடிந்தாலன்றி நல்ல விளைச்சலைக் கொடுக்காது என்று போதனை செய்தவர், மனிதர் வாழ்வதற்காகத் தன்னை மனமுவந்து ஈகை செய்தார். இருப்பினும் நம்முடைய வாழ்வு சாவில் முடிவடைவது அல்ல என்ற பெரும் உண்மையை உலகறியக் காட்டினார். நானே உயிர்ப்பும் உயிரும் என்று வெளிப்படுத்திய இயேசு, சாவை வென்று உயிர்த்தெழுந்தார். கல்லறை இயேசுவை அடக்கவில்லை. இறந்த மூன்றாம் நாள் இயேசு மாட்சியோடு உயிர் பெற்றார். அவருடைய சீடர்களுக்குப் பல தடவைகள் காட்சி அளித்தார். அவரைச் சந்தித்த சீடர்கள் அவரது உயிர்ப்பிற்கு சாட்சி வழங்கினார்கள். அதற்காகத் தம் உயிரையும் கொடுத்தார்கள். இதுவே கிறஸ்தவ நம்பிக்கை.

கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்பவர்களுக்கு கிறிஸ்துவின் உயிர்ப்பு எதிர்நோக்கை வழங்குகிறது. இரவு கழிந்து புதிய விடியல் பிறப்பது போல, துன்பமும், அழிவும், மனக்குழப்பங்களும் நிச்சயமற்றவை. அவை வாழ்வில் தவிர்க்கமுடியாதவை. ஆனாலும், வாழ்வு என்பது கடவுளின் கொடை என்பதால் அது அழிவுறாது, நிச்சயமானது. மரணத்தையும் வென்றவர் இயேசு.

அவரில் நம்பிக்கை கொள்பவர் தீமைகளை வெல்ல சக்தி கொள்வர். நம்மையும், பிறரையும் விடுவிக்க சிலுவைப்பாதை வழியாக நம்பிக்கையோடும், ஆர்வத்தோடும் உழைப்பார்கள். மனஉறுதியுடன் எட்டுத்திசைக்கும் சென்று சார்ந்து பகர்ந்தனர்.

**ஒருவிதை மண்ணில் வீழ்ந்து மடிந்தாலன்றி நல்ல விளைச்சலைக் கொடுக்காது என்று போதனை செய்தவர், மனிதர் வாழ்வதற்காகத் தன்னை மனமுவந்து ஈகை செய்தார். இருப்பினும் நம்முடைய வாழ்வு சாவில் முடிவடைவது அல்ல என்ற பெரும் உண்மையை உலகறியக் காட்டினார்.**

வாழ்வில் இனி என்னவோ என்று விரக்தியில் மூழ்கிய எம்மாவு சீடர்கள் இயேசு உயிர்த்துவிட்டார் என்று கண்டு மகிழ்ந்தனர்.

தான் நம்பிய குரு இயேசுவைக் கொன்றுவிட்டனர் என்று கலங்கிய மகதல மரியாள் இயேசுவை உயிர்த்த ஆண்டவராகக் கண்டு மகிழ்ந்தாள். அதை ஏனையவருக்கும் எடுத்துச் சொல்லி ஆரவாரம் செய்தாள்.

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தி, சிறையிலிட்ட பவுல் அடிகளார் கிறிஸ்துவின் உயிர்ப்பை உணர்ந்தவராய் இயேசுவுக்கு சான்று பகர்ந்தார்.

கிறிஸ்துவினது உயிர்ப்பு எம் அனைவரது வாழ்விலும், புத்துணர்வையும், புதுப்பித்தலையும் உருவாக்கட்டும். அழிவுகள், ஆக்கிரமிப்புக்கள், போலிகள் மத்தியில் வாழும் நாம் உண்மைக்கும், உயர்வுக்கும், நம்பிக்கைக்கும் சான்று பகரும் கிறிஸ்துவின் சீடராக உயிர்த்தெழுவோம்.

**- அருட்பணி ஜீவா போல் அமதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈரமான இதயங்களே உலகின் அழகு!


வெ. இன்சுவை

ஒரு சிறுவனின் நேர்மை, என்னை வியக்க வைத்தது. ஃபேஸ்புக்கில் பார்த்த ஒரு பதிவு. இன்றைய உலகத்தில் ஒருவர் ஒரு தவறு செய்துவிட்டால் யாரும் பார்க்கவில்லை என்றால், அங்கிருந்து நழுவி விடுவார்கள். ஆனால், ஒரு சிறுவன் அவ்வாறு ஓடி ஒளியவில்லை.

அவன் சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தபோது, தவறுதலாக இரு சக்கர வாகனம் மீது மோதிவிட்டான். அதன் காரணமாக அந்த பைக்கின் நம்பர் பிளேட் கீழே விழுந்துவிட்டது. ஒருவரும் அருகில் இல்லை. அவன் அங்கிருந்து ஓடிப் போயிருக்கலாம். ஆனால், அவன் அவ்வாறு செய்யவில்லை. கீழே விழுந்த நம்பர் பிளேட்டை எடுத்து அதை மீண்டும் பொருத்த முயன்றான். அது முடியவில்லை. தனது தவறை உரிமையாளிடம் சொல்லிவிட வேண்டும் என்று முடிவுசெய்து, அவர் வரும்வரை அங்கேயே காத்திருந்தான்.

சிறிது நேரம் கழித்து இரு சக்கர வாகன உரிமையாளர் வந்தார். அவரிடம் நடந்ததை அப்படியே கூறினான். அதுமட்டுமல்லாமல் தன்னிடம் இருந்த நாணயங்களை அவரிடம் நீட்டினான். அந்தச் சிறுவனின் அப்பாவித்தனமும், நேர்மையும் அந்த மனிதரைக் கலங்க வைத்துவிட்டது. சிறுவனை அன்போடு அணைத்துக் கொண்டார். இப்படிப்பட்ட நல்ல மனங்கள்தான் எதிர்காலத் தலைமுறைக்கு இருக்க வேண்டும்.

தவறு செய்வது மனித இயல்பு. ஆனால், அதை ஒப்புக்கொள்ளும் துணிச்சல் இருக்க வேண்டும். இந்தக் குழந்தையின் வளர்ப்பு குறித்து அவன் பெற்றோர் பெருமைப்



பட்டுக் கொள்ளலாம். இத்தகைய நேர்மையும் தைரியமும் ஒருவனை மிகச் சிறந்த மனிதனாக உருவாக்கும்.

இன்னொரு காணொலியும் மனதைத் தொட்டது. ஓர் இளம்பெண் வேகமாக சாலையில் ஓடிவருகிறாள். காணொலியைப் பார்த்தால் பேருந்தைப் பிடிப்பதற்கு ஓடி வருவதாகத் தோன்றியது. ஆனால், அவள் அதற்காக அவ்வளவு வேகமாக ஓடவில்லை. அவள் செய்த செயலை அவளுக்கே தெரியாமல் மாடியில் இருந்து ஒருவர் தன் கைப்பேசியில் விடியோ எடுத்து வெளியிட, துணிக்கடையில் வேலைசெய்யும் அந்தப் பெண்ணைப் பலரும் பாராட்டுகிறார்கள்.

பார்வை இழந்த ஒருவர் பேருந்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார். அவர் நிற்கும் இடத்தில் எந்தப் பேருந்தும் நிற்காது என்பதை அவர் உணரவில்லை. அவர் நிறுத்தத்துக்கு சற்று தள்ளி நிற்கிறார். ஒரு பேருந்து வந்து நிறுத்தத்தில் நிற்கிறது, அந்தப் பெண் இதைக் கவனிக்கிறாள். அவள் ஓடிப்போய் நடத்துநரிடம் சிறுது நேரம் காத்திருக்கச் சொல்லிவிட்டு, மீண்டும் ஓடிப்போய் பார்வையற்றவரை கையைப் பிடித்து அழைத்துவந்து பேருந்தில் ஏற்றி விடுகிறார். தன் தந்தை அனைவருக்கும் உதவி செய்வதைக் கண்டு வளர்ந்தவள் என்றும், அதனால் எல்லோரிடமும் அன்புகாட்ட கற்றுக்கொண்டேன் என்றும் சொல்கிறார்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் நம் மனதுக்கு இதமாக இருக்கின்றன. அந்தச் சிறுவனிடம் இருந்த நேர்மையும், அந்தப் பெண்ணிடம் இருந்த மனிதாபிமானமும் தான் இந்த சமூகத்தை இன்னும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. அன்பையும், பரிவையும் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியது பெற்றோரின் கடமை. இதை அவர்களுக்குப் புகட்டாமல் விட்டு விடும்போதுதான் பிள்ளைகள் தடம் மாறிப் போய்விடுகிறார்கள்.

வீட்டில் அன்பும் அனுசரணையும் கிட்டவில்லை என்றால், அவர்களின் மனம் வறட்சி தட்டிப்போய் பாலைவனமாகி விடுகிறது. நம் பாடத் திட்டங்களும் மாணவர்களின் அறிவை வளர்க்கின்றனவே ஒழிய, அவர்களின் ஆன்மாவை வளர்ப்பதில்லை. பாடங்களை மதிப்பெண்களாக மட்டுமே ஆசிரியர்களும் பார்க்கின்றனர். அவற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நீதி என்ன? தர்மம் என்ன?, வாழ்க்கைக் கோட்பாடுகள் என்ன?, விழுமியங்கள் என்ன? என்ற கண்ணோட்டத்தில் பாடம் நடத்துவது இல்லை.

தேர்வு முடிந்ததும் படித்தது அனைத்தையும் மாணவர்கள் மறந்து போகிறார்கள். அடுத்த கல்வியாண்டில் இன்னொரு புதிய பாடத்திட்டம். அவ்வளவுதான். ஆகவேதான், ஒழுக்கமுள்ள இளைஞர்களை உருவாக்குவதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஜப்பானிய கல்வி, கல்வி அறிவைவிட ஒழுக்கத்துக்கும் நற்பண்புகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பள்ளியைத் தூய்மை செய்வது முதல் உணவு

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 05.04.2026 - 11.04.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 22

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் ஏற்ற இறக்கமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் ஏமாற்றம் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகமாக இருக்கும், புதிய முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் னக்கசப்பு நீங்கும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷபம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போராட்டம் இருக்கும் இருக்கும், சில இடங்களில் சவால்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கும், பிள்ளைகளால் எந்த தொந்தரவும் இருக்காது.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால்கள் இருக்கும் , சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சிறப்பாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி பண வரவு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் குதூகலம் அதிகரிக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டம் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நடந்து மன மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வங்கி இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் நம்பி ஈடுபடலாம். குடும்பத்தில் மனக்குழப்பம் நீங்கி சந்தோசம் உண்டாகும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிக்கல் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பண இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் விரும்பி ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனக்குழப்பம் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும், பிள்ளைகளால் குதூகலம் கொண்டாட்டம் அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை அழுத்தம் குறைவாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு கூடுதலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சுலபமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் மதிப்பு உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி சந்தோசம் அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாதுலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் யோகமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டா யம் இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு சங்கடங்கள் உண்டாகும், சில இடங்களில் பொறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் விரைவாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் கையிருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் அதிர்ஷ்டகரமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு சிரமங்கள் உண்டாகும் , சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சுணக்கமாக நடக்கும். புதிய முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தாமதமாக நடக்கும். புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி குதூகலம் அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக நல்ல பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் சிரமமான நிலை உண்டாகும் , சில இடங்களில் சுறுசுறுப்பாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாறுதல் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடுமாற்றமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியத்தோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கி குதூகலம் அதிகரிக்கும், பிள்ளைகளால் மகிழ்ச்சியும் மன நிம்மதியும் உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தமான நிலை உண்டாகும் , சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை உயர்வு கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பணப்புழக்கம் அதிகரிக்கும், புதிய தொழிலில் நம்பிக்கையோடு ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த சலசலப்பு விலகி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமையும் சிறப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரஜா சக்தியும் ஒரு கட்சி முறைமையில் நாட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களும்!



**வீரகத்தி தனபாலசிங்கம்**

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) இலங்கையில் ஒரு கட்சி ஆட்சியை நிறுவும் நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்ற விமர்சனம் அண்மைக் காலமாக எதிரணி அரசியல் வட்டாரங்களில் முன்வைக்கப்பட்டு வருகிறது. தமிழ் அரசியல்வாதிகளில் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் இந்த விமர்சனத்தை முன்வைப்பதில் முன்னணியில் இருக்கிறார்.

கடந்த வருடம் ஜூனில் சீனாவுக்கு சென்றுவந்த பிறகு ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சீனாவின் ஒரு கட்சி ஆட்சிமுறையின் 'அனுகூலம்' குறித்து தெரிவித்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே முதலில் இந்த விமர்சனங்கள் அமைந்தன.

இலங்கையில் நீண்டகால நோக்கிலான பயனுறுதியுடைய சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு ஆளும் கட்சி 15 - 20 வருடங்களுக்கு தொடர்ச்சியாக ஆட்சியதிகாரத்தில் இருப்பது அவசியம் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதிகாரிகள் தனக்கு ஆலோசனை கூறியதாக தெரிவித்த சில்வா ஐந்து வருடத் தேர்தல் வட்டங்களை விடவும் சீனாவில் உள்ள ஒரு கட்சி முறைமை 30 - 40 வருடங்களுக்கு ஒரே சீரான திட்டமிடலைச் செய்வதற்கான ஆற்றலைக் கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

மெய்யான மாற்றத்தை நடைமுறைப் படுத்தவும் உறுதிப்பாட்டைப் பேணவும் அடுத்தடுத்து மூன்று அல்லது நான்கு தேர்தல்களில் வெற்றிபெற வேண்டியது அவசியம் என்று சீனக் கம்யூனிஸ்ட் கட்சி யோசனை கூறியதாகவும் ஒவ்வொரு புதிய அரசாங்கம் பதவிக்கு வரும்போது கொள்கைகளிலும் மாற்றம் ஏற்படுகின்ற நிலைவரத்துக்கு மாறாக சீன முறைமை ஒருங்கிணைந்த திட்டமிடலையும் கொள்கையையும் அனுமதிக்கிறது என்றும் சில்வா தெரிவித்தார்.


'சீனாவில் ஒரு வகையான ஜனநாயகம் இருப்பதாக நாம் உணருகிறோம். அந்த நாட்டில் ஒரு கட்சி முறைமை இருப்பது உண்மை. ஆனால், அதற்கு நேர்மறையான ஒரு பக்கமும் இருக்கிறது. ஏனென்றால், ஒரு திசையில், ஒரு திட்டத்தை நோக்கிச் செயற்படுவதற்கு அது உதவுகிறது.


'எமது நாட்டை மாற்ற நாம் ஆரம்பித்திருக்கிறோம். ஆனால், இந்த மாற்றத்தைக் கொண்டுவரும் செயன்முறைகளை நாம் முன்னெடுத்துக் கொண்டிருக்கும் போது அடுத்த ஐந்து வருடங்களில் எமது அரசாங்கம் மாறினால் நாம் தொடங்கிய சகலதுமே சீர்குலைந்து போகும். வேறு ஒரு அரசாங்கம் பதவிக்கு வந்து வேறுபட்ட முறையில் செயற்படும். அதன் காரணத்தினால் தான் ஒரு அரசாங்கம் 15, 20 அல்லது 25 வருடங்களுக்கு அதிகாரத்தில் இருந்தால் மாத்திரமே ஒரு நோக்கில், ஒரு கொள்கைக் கட்டமைப்பின் கீழ் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும் என்று நாம் நினைக்கிறோம். அதுவே சீனாவுக்கு இருக்கும் அனுகூலம். அதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அவர்களது எழுச்சிக்கான காரணங்களில் அது ஒன்று என்று நான் நம்புகிறேன்' என்று சில்வா கூறினார். இதை சுமந்திரன் 'எக்ஸ்' சமூக வலைத்தளத்தில் கடந்த வாரம் பதிவிட்டிருந்தார்.

அதன் ஆறு தசாப்தகால வரலாற்றில் அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இரு ஆயுதக் கிளர்ச்சிகளை நடத்திய ஜே.வி.பி. மார்க்சிய - லெனினிய கோட்பாட்டு வேர்களைக் கொண்ட இயக்கம் என்பதாலும் இன்று பாராளுமன்றத்தில் மூனறில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்துடன் அதன் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சியதிகாரத்தில் இருப்பதாலும் ஒரு கட்சி ஆட்சியை நிறுவுவதற்கு முனைப்புக்காட்டக்கூடும் என்று தற்போது பெருமளவுக்கு பலவீனமடைந்து சிதறுப்பட்டிருக்கும் எதிரணி அரசியல் கட்சிகள் அஞ்சுகின்றன.

ஒரு கட்சி ஆட்சியை நிறுவுவதில் ஜே.வி.பி.யின் தலைவர்களுக்கு நோக்கம் இருப்பதாக தனது அச்சத்தை ஏற்கெனவே உள்நாட்டில் பல தடவைகள் வெளிப்படுத்தியிருந்த சுமந்திரன் அண்மையில் இந்தியாவுக்கு சென்றிருந்த வேளையிலும் அது பற்றி குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை விவகாரங்களில் நெருக்கமான பரிச்சயமுடைய பத்திரிகையாளர் எம்.ஆர். நாராயண சுவாமிக்கு புதுடில்லியில் நேர்காணல் ஒன்றை வழங்கிய அவர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் 'பிரஜா சக்தி' திட்டத்தை ஒரு கட்சி முறையை நோக்கிய ஒரு அடியெடுத்துவைப்பாக அடையாளம் காட்டினார்.





**அதிகாரப்பகிர்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாளுவதில் நாட்டத்தைக் காண்பிக்காமல் இருந்து வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஒற்றையாட்சி மற்றும் மத்தியமயப்பட்ட அரசுக் கட்டமைப்பை உறுதியாக ஆதரிக்கிறது. இதனால், சிறுபான்மைச் சமூகங்கள் விசனமடைந்திருக்கின்றன என்பது உண்மை.**



'ஒரு கட்சி அரசை நோக்கி ஜே.வி.பி. நகரும் பேராபத்தை தமிழர்கள் மாத்திரமல்ல, முழு நாடுமே எதிர்நோக்குகின்றது. இது ஒரு பாரதூரமான நிலைவரமாகும். பிரஜா சக்தி என்ற வறுமை ஒழிப்புத் திட்டத்தை அரசாங்கம் தற்போது நடைமுறையில் உள்ள நிறுவனங்களையும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் தவிர்த்துக் கடந்து சென்று தாங்கள் தெரிந்தெடுக்கும் நபர்கள் குறிப்பாக, கட்சிக்காரர்களையும் ஆதரவாளர்களையும் கொண்ட கட்டமைப்பின் ஊடாக சமூகத்தின் கீழ்மட்டத்திலான அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு பயன்படுத்துகிறது.

'தமிழர்கள் அதிகப் பெரும்பான்மையாக வாழ்கின்ற வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கு சமாந்தரமான அதிகாரக் கட்டமைப்புக்களை அரசாங்கம் ஏற்கெனவே அமைக்கத் தொடங்கியிருக்கிறது. பல வருடங்களாக தேர்தல்கள் நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைகளின் எஞ்சிய அதிகாரங்களையும் அபகரிப்பதற்காக வடக்கில் தேசிய மக்கள் சக்தியின் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் நிழல் அமைச்சர்களாக நியமித்திருக்கிறது.

'நீண்டகாலமாக தங்களது கட்சி கொண்டிருந்த நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தயாராயிருக்கிறார். அவர் நியாயபூர்வமாகச் செயற்படக்கூடியவராக இருக்கின்ற அதேவேளை, அவரது கட்சிக்குள் இருக்கும் கடும்போக்காளர்கள் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையைப் பெற்ற பிறகு மற்றைய அரசியல் சக்திகளுடன் இணக்கபூர்வமாகச் செயற்படுவதற்கு எதிராக இருக்கிறார்கள்' என்று சுமந்திரன் நேர்காணலில் கூறியிருக்கிறார்.

உள்ளூர் சமூகங்கள் அவற்றின் சொந்த அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கு அதிகாரமளிக்கும் வகையில் பிரஜா சக்தியை வறுமை ஒழிப்புக்கான ஒரு தேசிய இயக்கம் என்று அரசாங்கம் கடந்த வருடம் ஜூனில் ஆரம்பித்தது.

வறுமை நிலையில் வாழும் மக்களுக்கு நேரடியாக பணக் கொடுப்பனவுகளைச் செய்வதை விடுத்து அபிவிருத்தி திட்டங்களை சமூகங்கள் தாங்களாகவே அடையாளங்கண்டு முன்னுரிமையின் அடிப்படையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளிப்பதன் மூலமாக வறுமையை ஒழிப்பதே நோக்கம் என்று அரசாங்கம் அறிவித்தது.

கிராம அதிகாரி பிரிவு மட்டங்களில் அமைக்கப்படும் சமூக அபிவிருத்தி சபைகளை (பிரஜா சக்தி சபை) அலகாகக் கொண்ட புதிய கட்டமைப்பையே இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் பயன்படுத்துகிறது.

சகல மாவட்டங்களிலும் உள்ளூர்த் தேவைகளை அடையாளங்கண்டு அபிவிருத்தி திட்டங்களை வகுப்பதும் அவற்றின் செயற்பாட்டு முன்னேற்றங்களை கண்காணிப்பதுமே சமூக அபிவிருத்தி சபையின் பொறுப்பு என்று கூறப்படுகிறது.

பிரஜா சக்தியை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் அணுகுமுறை மக்களினால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு சமாந்தரமானதும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்ளைக் கொண்டதுமான ஒரு கட்டமைப்பை சமூகத்தின் அடிமட்டத்தில் அமைப்பதாக இருக்கிறது என்பதே எதிரணி கட்சிகளின் குற்றச்சாட்டாகவுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு இடையூறு இல்லாமல் நடந்து கொள்ளும் அரசாங்கம் எதிரணி கட்சிகளினால் நிருவகிக்கப்படும் உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகளுக்கு பாதகமாக அமையக் கூடியதாக பிரஜா சக்தியை நடைமுறைப்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறிப்பாக, வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி சபைகள் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதற்கு பிரஜா சக்தி பெரும் தடையாக இருக்கிறது என்பதே சுமந்திரனின் முறைப்பாடாகும். திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சமூக அபிவிருத்தி சபைகள் பிரதேச செயலகங்களுடனும் மாவட்டச் செயலகங்களுடனும் இணைந்து செயற்படும் போது உள்ளூராட்சி சபைகளுக்கு முக்கியத்துவம் இல்லாமல் போகிறது.

ஆளும் கட்சியின் உறுப்பினர்களினால் அல்லது ஆதரவாளர்களினால் நிரப்பப்படும் சமூக அபிவிருத்தி சபைகள் அரசாங்கத்தின் முழுமையான அனுசரணையுடன் சமூகத்தின் அடிமட்டத்தில் கட்சி அரசியலுக்கான ஒரு கட்டமைப்பாக இயங்கக்கூடிய ஆபத்து இருப்பதாக எதிரணி கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் ஆயுதப் போராட்டப் பாதையைக் கைவிட்டு ஜனநாயக மார்க்கத்துக்கு வந்து விட்ட ஜே.வி.பி. முதலாளித்துவக் கட்டமைப்பை ஒழிக்க முயற்சிப்பதற்கு பதிலாக அந்த முறைமைக்குள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இரு தசாப்தங்களுக்கு முன்னர் ஜே.வி.பி.யின் தலைவராக வந்த ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க கட்சியை உறுதியான முறையில் பாராளுமன்ற ஜனநாயக மார்க்கத்தை நோக்கி வழிநடத்தி வந்திருக்கிறார். வன்முறைக் கடந்த காலத்தை மறந்து மக்கள் பரந்தளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் கட்சியாக மாறியிருக்கும் ஜே.வி.பி. பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்துக்கு எதிரானதாக தன்னை காட்டிக்கொண்டாலும், தற்போது நடைமுறையில் உள்ள முதலாளித்துவ ஜனநாயக கட்டமைப்புக்குள்ளேயே செயற்படுகிறது.

அத்துடன், ஜே.வி.பி. பல்வேறு அரசியல் குழுக்கள், சிவில் அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகளுடன் கூட்டுச் சேர்ந்து 2019 ஆண்டு அமைத்துக்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இந்தியாவில் தங்கியிருக்காமல் கைகோர்த்தல்!

**உலகளாவிய முன்னேற்றங்கள் ஒரு எச்சரிக்கைப் பாடத்தை வழங்குகின்றன. சமகால சர்வதேச அமைப்பில் உள்ள வல்லரசுகளின் நடத்தை, நாடுகள் பெரும்பாலும் தங்களின் சொந்த நலன்களுக்காகவே செயல்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. சில நேரங்களில் சிறிய கூட்டாளி நாடுகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் வகையில் இது நிகழ்கிறது.**



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவுடன் நடத்திய தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்து, ஒரு கப்பல் நிறைய பெட்ரோலை விரைவாக அனுப்பி வைத்ததன் மூலம் தனது நாடு இலங்கைக்கு கொடுக்கும் முன்னுரிமையை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளார். ஒரு விலையைச் செலுத்தியே இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. ஏனெனில் இந்தியாவில் அவ்வப்போது எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடுகளும் பிராந்திய ரீதியான சமநிலையின்மையும் நிலவுகின்றன.

பிரதமர் மோடியின் கீழ், இலங்கை மீது இந்தியா மிகுந்த நல்லெண்ணத்தைக் காட்டியுள்ளது. 2022 ஆம் ஆண்டில் இலங்கை சர்வதேச மட்டத்தில் வங்குரோத்து நிலையை எதிர்கொண்டபோது வழங்கப்பட்ட 4 பில்லியன் அமெரிக்க டாலர் உதவி அல்லது நான்கு மாதங்களுக்கு முன்னர் நாட்டின் பெரும் பகுதியைப் பாதித்த ‘டித்வா’ சூறாவளி ஏற்படுத்திய பேரழிவிற்குப் பிறகு வழங்கிய ஆதரவு என இந்தியா தொடர்ந்து உதவி வருகிறது. 2022 ஆம் ஆண்டில் இந்தியா வழங்கிய உதவி, மோசமான நெருக்கடியின்போது இலங்கையை நிலையுறுதிப்படுத்துவதிற்கு முக்கியமானதாக அமைந்தது என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



இந்த தொடர்ச்சியான உதவிகள் இலங்கை ஒரு அயல்நாடு என்பதற்கு அப்பால், அதன் உறுதிப்பாடு இந்தியாவின் சொந்த நலன்களுக்கு அவசியம் என்று இந்தியா கருதுவதை உணர்த்துகின்றன. இலங்கையின் சுமார் 90 பில்லியன் டாலர் பொருளாதாரத்துடன் ஒப்பிடுகையில், 6 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியுடன் இருக்கும் இந்தியாவின் 4,500 பில்லியன் டாலர் பொருளாதாரம், இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார அளவுகோலில் உள்ள பெரும் சமமின்மையையும் இலங்கைக்கு இந்தியாவுடனான உறவின் முக்கியத்துவத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ஜெர்மனியை தளமாகக் கொண்ட கீல் உலகப் பொருளாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் எரிசக்தி மற்றும் உரங்களை அதிகம் நம்பியிருப்பதால், கடுமையான உணவு விலை உயர்வால் பாதிக்கப்படக் கூடிய உலகின் இரண்டாவது நாடாக இலங்கை அடையாளம் காணப்பட்டுள்ளது. 2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு தனிநபர் வருமானம் இன்னும் 2018 ஆண்டின் மட்டத்திலேயே உள்ளது. வறுமை நிலை கடுமையாக உயர்ந்து, மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினரை உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்த குறிகாட்டிகள் நிலையான பொருளாதார மீட்சியின் அவசியத்தையும், இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு கூட்டுப் பங்காண்மைகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்றன.

இருப்பினும், இலங்கை தனது மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான தனது சொந்தப் பொறுப்புகளைத் துறந்துவிடாமல் இருப்பதும், இந்திய உதவி எல்லாக் காலத்திலும். இடையூறின்றிக் கிடைக்கும் என்று நம்பி முழுமையாக அதன் மீது தங்கியிராமல் இருப்பதும் முக்கியமானது.

இந்தியாவுக்கு ஒரு சுமையாக விட்டு விட்டு இலங்கை அமைதியாக இருக்கும் ஒரு நீண்டகாலப் பிரச்சினை, இந்தியாவில் சுமார் மூன்று தசாப்தங்களாக அகதிகளாக வாழும் 90,000 இலங்கையர்களைப் பற்றியதாகும். அண்மையிலேயே ஒரு அரசாங்கத் தலைவர், அமைச்சர் பிமல் இரத்நாயக்க, அவர்களின் பிரச்னையை பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு அவர்களைத் திரும்பி வருமாறு அழைப்பு விடுத்துள்ளார். இது இலங்கை இந்தியாவின் ஆதரவைப் பெறும்போது நிறைவேற்றப்பட்டதாக தனது சொந்தப் பொறுப்புகளையும் கையில் எடுக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் நீண்டகாலமாக விடுபட்ட ஒரு காரணி அந்நிய முதலீட்டின் பற்றாக்குறையாகும். கடந்த காலங்களில் இது உள்நாட்டு மோதல்களால் ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடின்மை, சட்டத்தின் ஆட்சியின் பலவீனம் மற்றும் அதிக அளவிலான ஊழல் ஆகியவை இதற்கு காரணமாக இருந்தது. இப்போது இந்த விடயத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தியா உள்ளிட்ட அபிவிருத்திப் பங்காளிகளிடமிருந்து முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு வாய்ப்பு இப்போது உள்ளது.

ஜனாதிபதி திசநாயக்கவுடனான தனது கலந்துரையாடலில், பிரதமர் மோடி திருகோணமலையில் உள்ள பிரிட்டிஷ் காலத்து எண்ணெய் சேமிப்புக் குதங்கள் தொடர்பில் குறிப்பிட்டதாகத் தெரிகிறது. இவை முதலில் இந்து சமுத்திரத்தில் இருந்த பிரிட்டிஷ் கடற்படைக்கு சேவை செய்வதற்காகக் கட்டப்பட்டவை. 1987 இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையின் கீழ், இந்தக் குதங்களை இந்தியாவுடன் இணைந்து மேம்படுத்த இலங்கை ஒப்புக் கொண்டது. 2022 ஆம் ஆண்டில் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஓயில் கார்ப்பரேஷன் ஆகியவை இணைந்து இந்த வசதியை மேம்படுத்த மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

எவ்வாறாயினும், முன்னேற்றம் மெதுவாகவே இருப்பதுடன் திட்டம் ஓரளவு மட்டுமே செயற்படுத்தப்பட்டுள்ளது. உலகளாவிய எரிசக்தி நிச்சயமற்ற தன்மை மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் பதற்றங்களின் பின்னணியில் இந்த எண்ணெய் சேமிப்புக் குதங்களின் மதிப்பு தெளிவாகியிருக்கிறது. எரிசக்தி ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போன்று, விநியோகத் தடையின் போது மூலோபாய சேமிப்பு வசதிகள் நாடுகளுக்கு அதிக மீள்திறனை வழங்க முடியும்.

திருகோணமலை குதங்கள் இலங்கைக்கு மாத்திரமல்ல, பிராந்திய எரிசக்தி பாதுகாப்புக்கும் ஒரு முக்கியமான மூலோபாய சொத்தாக மாறக்கூடும். இருப்பினும், வரலாற்றுப் பின்னணிகள் இந்தியாவுடனான இலங்கையின் ஆழமான பொருளாதார இணைப்பிற்குத் தடையாகத் தொடருகின்றன. பண்டைய வரலாறும் நவீன வரலாறும் இரண்டுமே இரு தரப்பிலும் உள்ள எண்ணங்களை வடிவமைக்கின்றன.

இரு நாடுகளுக்கும் இடையில் அளவிலும் அதிகாரத்திலும் உள்ள சமச்சீரற்ற தன்மை இலங்கைக்குள் ஒரு நிரந்தர கவலையாக உள்ளது. இந்தியா ஒரு பிராந்திய வல்லரசு, இலங்கை ஒரு சிறிய நாடு. இந்த ஏற்றத்தாழ்வு கூட்டுப் பங்காண்மைக்கான வாய்ப்புகளையும் பெருமளவில் தங்கியிருப்பது குறித்த கவலைகளையும் ஒரு சேர உருவாக்குகிறது. தற்போதைய அரசாங்கமும் இந்தியாவுடன் பொருளாதார மற்றும் உள்கட்டமைப்பு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது,

ஆனால் இவற்றில் பல இன்னும் ஆரம்பக் கட்டங்களைத் தாண்டவில்லை. இது இந்திய அரசாங்கத்திற்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் அபிவிருத்தியை ஆதரிப்பதற்கான தனது முயற்சிகள் போதுமான அளவு மெச்சப்படவில்லை அல்லது திறம்பட பயன்படுத்தப்படவில்லை என்று இந்தியா கருதுகிறது. இந்தியாவின் பார்வையில் தாமதங்களும் தயக்கங்களும் அர்ப்பணிப்பு இல்லாமையாகத் தோன்றலாம். இலங்கையின் பார்வையில், எச்சரிக்கை என்பது பெரும்பாலும் உள்நாட்டு அரசியல் உணர்வுகள் மற்றும் இறையாண்மை குறித்த கவலைகளால் தூண்டப்படுகிறது.

அதேவேளை, உலகளாவிய முன்னேற்றங்கள் ஒரு எச்சரிக்கைப் பாடத்தை வழங்குகின்றன. சமகால சர்வதேச அமைப்பில் உள்ள வல்லரசுகளின் நடத்தை, நாடுகள் பெரும்பாலும் தங்களின் சொந்த நலன்களுக்காகவே செயல்படுகின்றன என்பதைக் காட்டுகிறது. சில நேரங்களில் சிறிய கூட்டாளி நாடுகளுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் வகையில் இது நிகழ்கிறது. பெரியதும் பலம் பொருந்தியதுமான ஒரு நாடு தனக்கான ஒரு வாய்ப்பைக் கண்டால், பழைய நட்புகளும் வாக்குறுதிகளும் கைவிடப்படலாம் என்ற நிலையே இன்று உலகில் காணப்படுகிறது.

டென்மார்க் (கிரீன்லாந்து) மற்றும் கனடா (51வது மாநிலம்) ஆகியவற்றின் நிலை துயரமான செய்திகளைத் தருகின்றன. இருதரப்பு உறவுகளில் அதிகார சமச்சீரற்ற தன்மையே முடிவுகளைத் தீர்மானிக்கிறது என்று சர்வதேச உறவுகள் துறை ஆய்வாளர்கள் அடிக்கடி சுட்டிக் காட்டுகின்றனர். 19 ஆம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் பிரதமர் லார்ட் பால்மர்ஸ்டன் கூறிய புகழ்பெற்ற கருத்து ஒன்று இருக்கிறது. “நாடுகளுக்கு நிரந்தர நண்பர்களோ அல்லது கூட்டாளிகளோ கிடையாது, அவர்களுக்கு நிரந்தர நலன்கள் மட்டுமே உண்டு” என்று அவர் கூறினார். இது மிகக் கடுமையான ஒரு கூற்றாக இருந்தாலும், சிறிய நாடுகள் கவனமாக கையாள வேண்டிய ஒரு யதார்த்தத்தை இது படம் பிடித்துக் காட்டுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை, இது ஒரு சமநிலையைப் பேண வேண்டிய அவசியத்தைக் குறித்து நிற்கிறது. பொருளாதார வளர்ச்சி, கல்வி, இணைப்பு மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றில் இந்தியா வழங்கும் கூட்டுப் பங்காண்மையை அது தெளிவாக அங்கீகரிக்க வேண்டும். இந்தியா புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. டிஜிட்டல் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு உதவுகிறது. இலங்கையின் நீண்டகால அபிவிருத்திக்கு பங்களிக்கக்கூடிய எல்லை தாண்டிய தொடர்புகளை ஊக்குவித்துள்ளது. இவை குறைத்து மதிப்பிடக் கூடாத உறுதியான நன்மைகள்.

அதே நேரத்தில், இந்தியாவின் தாராள மனப்பான்மையில் இலங்கை அளவுக்கு அதிகமாகத் தங்கியிராமல் அல்லது அதன் பெரிய அயல் நாட்டின் ஒரு அங்கமாக மாறும் நிலைக்குச் செல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். பொருளாதாரச் சார்பு சரியாக முறையில் நிர்வகிக்கப்படாவிட்டால் அரசியல் பாதிப்புக்கு வழிவகுக்கும். இதற்கான சரியான பதில் இந்தியாவிலிருந்து தூர விலகிச் செல்வது அல்ல, மாறாக தனது கூட்டுப் பங்காண்மைகளை விரிவுபடுத்துவதாகும். பலதரப்பட்ட நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் ஊடாட்டங்களை அதிகரிப்பது இலங்கைக்கு அதிக சுயாதீனத்தையும் மீள்திறனையும் வழங்கும்.

நிதானமான மதிப்பீட்டின்படி, இந்தியாவின் ஆதரவு உண்மையானது என்பதையும் அதே சமயம் நலன்கள் சார்ந்தது என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இலங்கை உறுதிப்பாட்டுடன் செழிப்பாக இருப்பதையும் இந்தியாவின் பரந்த பிராந்திய கண்ணோட்டத்துடன் ஒத்துப் போவதையும் உறுதி செய்வதில் இந்தியாவுக்கு தெளிவான பங்கு உள்ளது. திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் போன்ற ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டங்களை இலங்கை முன்னெடுத்துச் செல்ல வேண்டும், செயல்படுத்தும் திறனை மேம்படுத்த வேண்டும் மற்றும் ஒரு நம்பகமான கூட்டாளியாக தன்னை நிரூபிக்க வேண்டும்.

இது ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் உள்ள பிற பங்காளிகளிடமிருந்து முதலீடு மற்றும் ஒத்துழைப்பைத் தேடுவதைத் தடுக்கப் போவதில்லை.

எனவே, முன்னால் உள்ள பாதை சமநிலையான ஊடாட்டமாகும். இலங்கை தனது சொந்த நிறுவனங்களை வலுப்படுத்திக் கொண்டும், உள்நாட்டுப் பொறுப்புகளை நிறைவேற்றிக் கொண்டும், வெளிநாட்டு உறவுகளை பன்முகப்படுத்திக் கொண்டும் இந்தியாவின் கூட்டுப் பங்காண்மையை வரவேற்க வேண்டும். இந்த அணுகுமுறை, சமச்சீரற்ற தன்மையால் வடிவமைக்கப்பட்ட ஒரு உறவை பரஸ்பர நன்மையினாலும் நம்பிக்கையினாலும் வரையறுக்கப்பட்ட ஒன்றாக மாற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேசிய மக்கள் சக்தியைத் தவிர வேறெந்த அரசியல் கட்சியாலும் ஏன் தனித்தியங்க முடியவில்லை?

**பனங்காட்டான்**

போரில் தாங்கள் வென்றுவிட்டதாக ஈரான் உயர்பீடம் அறிவித்து ஒருவாரத்துக்கு மேலாகியும், வளைகுடா நிலைவரம் அவ்வாறு காணப்படவில்லை. இஸ்ரேலுக்காக போரை ஆரம்பித்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆப்பிழுத்த நிலையில் போரைத் தொடரவும் முடியாமல் அதனை முடிக்கவும் முடியாமல் தவிப்பதுபோல் தெரிகிறது.

அமெரிக்காவுக்கு ஈரானில் கல்லறை கட்டப்படுமென அந்நாடு அச்சுறுத்தியுள்ளது. இந்தப் பயமுறுத்தல் ஒருபுறமிருக்க, அமெரிக்க பாதுகாப்பு வட்டத்துள் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது அம்பலமாகியுள்ளது.

அமெரிக்க அட்டர்னி ஜெனரலாக பதவியேற்ற நாளிலிருந்து ட்ரம்பின் நிழலாக இயங்கி வந்த பாம்மொன்டியை அப்பதவியிலிருந்து அதிரடியாக நீக்கிவிட்டு துணை அட்டர்னி ஜெனரலை அப்பதவிக்கு ட்ரம்ப் நியமித்துள்ளார். அமெரிக்க ராணுவத்தின் உயர் தளபதியான ரான்டிஜோர்ஜை உடனடியாக பதவிவிலகுமாறு பாதுகாப்புச் செயலர் பீட் ஹெக்சிட் உத்தரவிட்ட து நடைமுறைக்கு வந்துள்ளது. அத்துடன் மேலும் பல உயரதிகாரிகள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சில வாரங்களுக்கு முன்னராக அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் கிறிஸ்டி நோயெம் அவர்களை காரணம் எதுவும் கூறாது பதவிநீக்கம் செய்தார் ட்ரம்ப். தற்போது அரச உயர்மட்டத்தில் பணியாற்றுபவர்கள் எவருக்குமே அவர்களின் பதவி நிரந்தரமற்றதாகிவிட்டதென வெள்ளை மாளிகை அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனை எழுதிக் கொண்டிருக்கையில் வெளிவந்துள்ள செய்தி, அமெரிக்காவின் இரண்டு உயர்ரகபோர் விமானங்கள் ஈரான் வான் பரப்பில் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன என்பது. இதனை ட்ரம்ப் நிர்வாகம் உண்மையில்லை எனக் கூறுகிறது. ஆனால், அந்த விமானத்தின் ஓட்டிகளை அமெரிக்கா தேடிக்கொண்டிருப்பதாக இன்னொரு செய்தி கூறுகிறது. போர்க்காலத்தில் உண்மைகள் பொய்யாக்கப்படுவதும், பொய்கள் உண்மையாக்கப்படுவதும் சகஜம் என்பதை முள்ளிவாய்க்காலில் கண்டவர்கள் ஈழத்தமிழர்.

அமெரிக்கா அடிக்கடி வெவ்வேறு வகையான போர் நிறுத்தத்தை உச்சரித்து வருகிறது. ஆனால் ஈரான் அவை எல்லாவற்றையுமே நிராகரித்து வருகிறது. அமெரிக்க திட்டங்களை நிர்மூலமாக்கும்வரை போர் தொடரும் என்ற அறிவித்தலும் ஈரானுடையது. நிலைமையைப் பார்க்கின் போர் மேலும் சிலவாரங்களுக்கு நீடிக்கலாம்போல் தெரிகிறது.

வளைகுடா போர் என்று இது அழைக்கப்பட்டாலும் உலகளா வியரீதியில் சகலநாடுகளும் இதன் பாதிப்பை அனுபவிக்கின்றன. எரிபொருள் தட்டுப்பாடு, அதனால் ஏற்பட்டவிலை உயர்வு இரண்டுமே இதற்கான மூலம். உணவுப் பொருட்களின் விலை ரொக்கட் வேகத்தில் எகிறுகிறது. இதனைக் கட்டுப்படுத்தும் நிலை எவரிடமும் இல்லை. இதனைச் சுட்டிக்காட்டி போரை முடிவுக்குக் கொண்டுவரும் நிலையில் வல்லமையும் எந்த நாட்டிடமும் இல்லை. சர்வதேசஅமைப்புகளாலும் இதனை சாத்தியப்படுத் தமுடியாது.

இலங்கையில் இதனால் ஏற்பட்டு வரும் பாதிப்பு அப்பாவிமக்களின் வாழ்வை பெருமளவில் இன்னலுக்குள்ளாக்குகிறது. பாடசாலைகளுக்கு வாரத்தில் ஒருநாள் மேலதிக விடுமுறை. அலுவலகங்கள் வாரத்துக்கு ஒருநாள் பூட்டு. தேவைப்படுமாயின் ஊழியர்களை வீட்டிலிருந்து பணியாற்றுமாறு நிர்ப்பந்திக்கும் நிலை காணப்படுகிறது.

வளைகுடா யுத்தம் தொடருமானால் இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மை பெருமளவு பாதிக்கப்படுமெனவும், உணவுப் பொருள் இன்மை மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்குமெனவும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழக தெற்காசிய ஆய்வுமையம் எச்சரித்துள்ளது. ஹோர்மூஸ் நீரிணையைஈரான் மூடியுள்ளதால் உணவு விநியோக சங்கிலி துண்டிக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள ஐக்கியநாடுகள் சபை, உணவுப் பொருள்களின் விலை உயர்வினால் வளர்முக நாடுகளின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமென அறிவித்துள்ளது.

இவ்வாறான நெருக்கடி வேளையில் இலங்கை அரசுக்கு உதவ அதன் நட்பு நாடுகள் முன்வந்துள்ளன. பல வெளிநாடுகளின் அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், மூத்த அதிகாரிகள் நேரடியாக கொழும்புக்கு விஜயம் செய்துதாங்கள் வழங்கக்கூடிய ஆதரவை தெரிவித்து வருகின்றனர். நெருக்கடிக் கால உதவிகளாயினும் அரசியல் கலப்பும் ஆங்காங்கே காணப்படுவதால் நாடிவரும் சில உதவிகளை ஏற்றுக்கொள்ளும் நிலையில் ஆட்சித்தரப்பு இல்லாதிருப்பதையும் காணமுடிகிறது.

நாட்டை ஆள்வது அரசாங்கமாயினும் அது வெறுமனே ஆளுந்தரப்பாக இருக்கமுடியாது. முக்கியமாக நெருக்கடிகாலங்களில் எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்தோடு இணைந்து ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கி ஒன்றுபட்டு செயற்பட்டால் மட்டுமே மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை ஓரளவேனும் குறைக்கமுடியும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தளவில் அவ்வாறான சூழ்நிலைகாணப்படவில்லை. எரிகிறநெருப்பில் பிடுங்குவது லாபம் என்பதுபோல வளைகுடாவினால் உருவாக்கப்பட்ட எதிர்பாராத பாதிப்பை தங்களுக்கான அரசியல் ஆதாயமாக்க எதிர்க்கட்சிகள் துடித்துக் கொண்டிருக்கின்றன. இயற்கை அனர்த்தமானாலும் சரி, எதிர்பார்க்காத போர்ச் சூழலானாலும் சரி அரசாங்கத்தை குற்றஞ்சாட்டி அதனூடாக லாபம் பெறுவதை எதிர்க்கட்சிகள் தலையாய பணியாக மேற்கொள்கின்றன. இவற்றுக்கு உதாரணமாக அண்மையசிலநிகழ்வுகளைப் பார்க்கலாம்:

ஜாதிக ஜன பலவேகய
தேசிய மக்கள் சக்தி
JATHIKA JANA BALAWEGAYA (NPP)

> சிங்களத் தரப்பிலும் சரி தமிழர் தரப்பிலும் சரிதே சியமக்கள் சக்தியைத் தவிர எந்தவொரு அரசியல் கட்சியாலும் தனித்து இயங்கமுடியாத நிலைதொடர்ந்து வருகிறது. இப்போது ஏதாவது ஒரு தேர்தல் இடம்பெற்றாலும் இவை தமக்குள் கொள்கை அடிப்படையிலான இணக்கத்தை ஏற்படுத்தும் சூழல் அரிதாகவே காணப்படுகிறது.

முன்னைய ஆட்சிக் காலங்களில் புலனாய்வுத்துறையில் பணியாற்றிய அதிகாரிகள் பலர் இப்போது புலனாய்வுத்துறையின் ஆய்வுத்துறையின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சட்டமும் நீதியும் சுயாதீனமாக இயங்குமென ஆட்சித் த்ரப்பு மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறது. ஆனால் இதனை ஏற்கும் நிலையில் எதிரணிகள் இல்லை.

இலங்கையின் யுத்தகாலத்தில் விடுதலைப் புலிகளுக்கே அஞ்சாத புலனாய்வாளர்கள் தற்போதைய ஆட்சியாளர்களின் அச்சுறுத்தலுக்கு அஞ்சப்போவதில்லை என்று சவால் விட்டுள்ளார் ராஜபக்சக்களின் இளையவாரிசான நாமல் பேபி. இது நீதியான விசாரணைக்கு இடையூறு விளைவிக்கும் தன்மையானது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தம் உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் தமது தந்தையாரான ஜனாதிபதி மகிந்த வெளிநாடு ஒன்றில் மறைந்திருந்துவிட்டு, யுத்தம் முடிவுற்றதாக அறிவித்த பின்னர் நாடு திரும்பி கட்டுநாயக்க விமானத்தளத்தில் இறங்கியதும் அந்த மண்ணை எதற்காக தொட்டு வணங்கினார் என்பதை நாமல் ஏனோ மறந்துவிட்டார்.

தமது சித்தப்பாவான கோதபாயவை சிம்மாசனம் ஏற்றிய அவரது ஆதரவாளர்களுக்கு அஞ்சியே அவர் நாட்டைவிட்டு கப்பலில் தப்பியோடினார் என்பதையும் நாமல் மறந்துவிட்டார். இன்னொரு சித்தப்பாவான பசில் ராஜபக்ச ஊழல் வழக்குகளுக்கு முகங்கொடுக்க முடியாது அஞ்சியே இன்னமும் அமெரிக்காவில் மறைந்திருக்கிறார் என்பதையும்கூட நாமல் மறந்துவிட்டார் போல் தெரிகிறது.

இங்கு குறிப்பிடப்படவேண்டிய இன்னொருவர் மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதியான உதயகம்மன்பில. இன்னொரு தோற்றுப்போன அரசியல் வாதியான விமல் வீரவன்சவின் தோழர் இவர். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக சிலர் கைதாகி தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவரும் வேளையில் ஒரு நூலை இவர் வெளியிட்டுள்ளார். இது முன்னைய ஆட்சியாளர்களான ராஜபக்சக்களை நிரபராதிகளாக வெளிக்காட்டுவதற்கான ஒரு முயற்சி என்று பொதுவெளியில் பேசப்படுகிறது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்தவும் கோதபாயவும், இவர்களது ஆட்சிக்காலத்தில் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தவர்களே பெருமளவில் காணப்பட்டனர். சிங்கப்பூரில் சிகிச்சைபெற்றுவரும் ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றவில்லை. எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதில் பங்குபற்றியிருந்தாலும் நூலின் உள்ளடக்கத்தை தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாதென்று சஜித்தின் ஐக்கிய மக்கள் சக்திகட்சிச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

உதயகம்மன்பிலவின் நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் கேள்விக்குரியவை எனவும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பவர்களை நிரபராதிகளாக சித்தரிக்கும் நோக்கம் கொண்டதெனவும் சொல்லப்படுகிறது. இதனை முற்கூட்டியே தெரிந்து கொண்டதாலேயே ராஜபக்சச கோதரர்கள் தமது சகாக்களுடன் வெளியீட்டு மண்டபத்தில் குழுமியிருந்தனர் என்றும் சமூக ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. இந்நூலின் தரவுகள் ஏற்கனவே உதயகம்மன்பிலவிடம் இருந்திருந்தால் பலர் கைதாவதற்கு முன்னரே இதனை ஏன் வெளியிடவில்லை என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இந்நூலினூடாக விசாரணைகளை திசைதிருப்பிபொதுமக்கள் மத்தியில் ராஜபக்சக்களை குற்றமற்றவர்களாகக் காட்டும் நோக்கம் உள்ளதெனவும் சுட்டிக்காட்டப்படுவதை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

கொழும்பு நீதிமன்ற கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு ரகசியப் பொலிசாலும் விசாரணையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இசாரா செவ்வந்தியின் பிறந்தநாளை கொண்டாடுவதற்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முயற்சிபாது காப்புத்துறைக்குள் இருக்கும் சிலரது நம்பகத்தன்மையை வெளிக்கொணர்ந்துள்ளது. இதுதொடர்பாக உயர் அதிகாரியொருவர் உடனடியாக நடவடிக்கைக்குஉட்படுத்தப்பட்டுள்ளார்.

இவ்வாறான அண்மைய சம்பவங்கள் ஆட்சித்தரப்பில் காணப்படும் இடைவெளியையும், வளைகுடா யுத்தத்தினால் மக்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் ஆட்சித் தரப்பை இழுத்து வீழ்த்துவதில் எதிர்கட்சிகள் கொண்டிருக்கும் ஆர்வத்தையும் புரிந்துகொள்ளவைக்கிறது.

ஆயினும் இலங்கைஅரசியலில் தேசிய மக்கள் சக்தியைத் தவிரவேறெந்த அரசியல் கட்சியும் தனித்து இயங்க முடியாது தடுமாறிக் கொண்டிருக்கின்றன. அடிக்கடி எதிரணிகள் இணைப்புப் பற்றி பேசப்பட்டாலும் சாண் ஏற முழம் சறுக்கும் நிலைமையேகாணப்படுகிறது.

தென்னிலங்கையில் மட்டுமன்றி தமிழர் தாயகத்திலும் இதுவே நிலைமை. தேர்தலை ஒட்டிய இணைப்புகள் பிணைப்புகள் என்று அவ்வப்போது பேசப்பட்டாலும் அவற்றில் வெற்றிகாணும் நிலைமை எங்கும் இல்லை. இணக்கப் பேச்சுகள் முன்னேற்றம் காண்பதாக அறிவிக்கப்பட்டாலும் அது தற்காலிக பொறிப்பந்தலாக வேமாறிவிடுகிறது. இதுவே தேசியமக்கள் சக்தி தனித்து தனது திட்டங்களை நிறைவேற்றி வருவதற்கு அனுகூலமாக அமைந்துவருகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈழத் தமிழர்கள் அரசியல்ரீதியில் ஒரு படித்த சமூகமா?



-யதீந்திரா

சில தினங்களுக்கு முன்னர் ஒரு ராஜதந்திரியுடன் உரையாடிக் கொண்டிருந்த போது, அவர் சில கேள்விகளை கேட்டார். அந்தக் கேள்விகள் எனக்கானது அல்ல - மாறாக, சமஸ்டி பற்றியும், ஒரு நாடு இரு தேசம் பற்றியும் பேசிவரும் அரசியல்வாதிகளுக்கானது. தங்களிடம் எவரேனும் சமஸ்டி பற்றி அபிப்பிராயம் கேட்டால், அது சிறந்தது - அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என்றுதான் நாங்கள் பொதுவாக கூறுவதுண்டு. ஏனெனில் அது உண்மையிலேயே சிறந்ததுதான். அதில் சந்தேகம் வேண்டியதில்லை. எனவே நீங்கள் சமஸ்டி பற்றி எங்களுடைய அபிப்பிராயத்தை கேட்பீர்களானால் எங்கள் பக்கத்திலிருந்து, எப்போதும் உங்களுக்கு சாதகமான பதிலே கிடைக்கும் ஆனால் நாங்கள் கூடவே ஒரு கேள்வியையும் கேட்போம் - அதாவது, சமஸ்டி நல்ல விடயம் ஆனால் அதனை எவ்வாறு அடையப் போகின்றீர்கள்?

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எங்களிடம் வருகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், நாங்கள் இவ்வாறுதான் பதிலளிக்கின்றோம். இலங்கையில் சமஸ்டியை அடைவது என்றால் அது நாடாளுமன்ற பலத்தின் ஊடாகத்தான் அடைய முடியும். அவ்வாறான பலம் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருக்கின்றதா? தமிழ் அரசியல்வாதிகளால் எப்போதாவது அவ்வாறான நாடாளுமன்ற பலத்தை அடைய முடியுமா? இந்த இரண்டு கேள்விகளுக்கும் எந்தவொரு தமிழ் அரசியல்வாதியிடமும் பதில் இல்லை - ஏனெனில் இதற்கு பதிலளிக்கவே முடியாது.

அந்த ராஜதந்திரி இவ்வாறு கூறியபோது சமாதான உடன்பாட்டு காலத்தில், ஒரு கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் கூறிய விடயம் எனது நினைவில் வந்தது. அதனையும் அவருடன் பகிர்ந்து கொண்டேன். அதனை ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளர்தான் என்னிடம் கூறினார். அதாவது, அவர் சொன்னாராம் நீங்கள் உலகத்திடம் வருகின்றபோது முழக்கங்களோடு வரக் கூடாது. யதார்த்தபூர்வமான வாதங்களுடனும், சாத்தியமான விடயங்களுடனும் வர வேண்டும். 1976ல் வட்டுக்கோட்டையில் தீர்மானம் நிறைவேற்றினோம், 1977ல் மக்கள் ஆணை பெற்றோம் - இவ்வாறான கதைகளை கேட்க முடியும் ஆனால் அதனை ஒரு விடயமாக எடுத்துக் கொள்ள முடியாது. எப்போதும் ஒன்றைப் பெற்றுக் கொண்டு அதிலிருந்துதான் முன்னேறுவது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது நீங்கள் ஒன்றை நினைத்துக் கொண்டு அதனை மற்றவர்கள் பெற்றுத் தர வேண்டும் என்றால், அது ஒரு போதும் நடக்ககூடிய ஒன்றல்ல எனவே முதலில் ஒன்றை பெற்றுக்கொள்ளுங்கள் - அது எவ்வளவு குறைவானதாக இருந்தாலும் கூட.

அந்த ராஜதந்திரி கூறிய விடயங்கள் தொடர்பில் இந்தக் கட்டுரையாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் பதிவு செய்திருக்கின்றார். அதே போன்று இன்னும் சிலரும் பதிவு செய்திருக்கின்றனர். ஆனாலும் தமிழ் சமூகத்தின் மத்தியில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியளவிற்கு விழிப்புணர்வு ஏற்படவில்லை. இப்போதும் கூட சமஸ்டி பற்றியும் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றியும், தமிழர் தாயகக் கோட்பாடு பற்றியும், திருகோணமலை ஈழத் தமிழரின் தலைநகரம் - இப்படியான கற்பனைகளை கூறும் போது, தமிழர்கள் கோபப்படவில்லை. உண்மையில் இவ்வாறான அரசியல் பாதகம் புரிவோரைக் கண்டால், அவர்கள் முகத்தில் காறி உமிழும் ஆவேசம் ஏற்பட வேண்டும் ஆனால் அவ்வாறான அரசியல் சீற்றத்தை எங்குமே காண முடியவில்லை.

இதற்கு இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும்! ஒன்றில் ஈழத் தமிழர்களுக்கு அரசியலில் எவ்வித கரிசனையும் இல்லை அதாவது, ஒரு திரைப்படத்தை பார்த்துவிட்டு சாதாரணமாக கடந்து செல்லும் உணர்வுடன்தான் அரசியலையும் புரிந்து கொள்கின்றனர் - அல்லது, அரசியல்ரீதியில் ஈழத் தமிழ் சமூகம் ஒரு படிப்பறிவற்ற சமூகமாக இருக்க வேண்டும் - அதாவது, தமிழரின் படிப்பு என்பது அவர்களின் மத்தியதரவர்க்க வாழ்க்கைக்கானது மட்டும்தான்? உதாரணமாக ஒரு வைத்தியராக வருவது - பொறியலாளராக வருவது - சட்டத்தரணியாக வருவது என்னுமளவிற்குத்தான் தமிழ் சமூகம் என்பது ஒரு படித்த சமூகமாக இருக்கின்றது.

இந்தக் கட்டுரை பற்றி யோசித்துக் கொண்டிருந்த போது, ஒரு செய்தியை பார்க்க முடிந்தது. அதாவது, மீண்டும் மண்குதிரையில் ஆற்றைக் கடப்பதற்கான முயற்சி பற்றி ஆலோசிக்கப்படுகின்றதாம். இனப்பிரச்சினையில் தனித்து செயற்படுவதில்லை என்னும் அடிப்படையில், சமஸ்டி அரசமைப்புக்கான சமூக ஒப்பந்தம் ஒன்றை தயாரிப்பதுதுதான் இந்த முயற்சியின் நோக்கமாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான முயற்சியை மேற்கொள்பவர்கள் அனைவருமே கொழும்பு சட்டத்தரணிகள் என்பதுதான் இதிலுள்ள வேடிக்கை. இந்த இடத்தில்தான் ஒரு படித்த சமூகத்திற்கும் அரசியலை படித்த சமூகத்திற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை ஒருவர் புரிந்துகொள்வது இலகுவாகின்றது.

> **யுத்தத்தின் முடிவும் அதன் பின்னரான கடந்த பதினேழு ஆண்டு கால அரசியல் அனுபவங்களையும் தொகுத்துப் பார்த்தால், ஈழத் தமிழர் சமூகம் அரசியல் ரீதியில், ஒரு படித்த சமூகம் என்பதற்கான சான்றுகளை, பெரியளவில் காண முடியில்லை.**

இவ்வாறான முயற்சியில் ஈடுபடுவர்கள் அனைவருமே படித்தவர்கள் என்பதில் இரு வேறு கருத்துக்கள் இல்லை ஆனால் அவர்கள் அரசியலை படித்தவர்களா? ஆகக் குறைந்தது அவர்கள் அரசியலை படிக்கவும் முயற்சிப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறான சட்டத்தரணிகளின் விருப்பமும், அவர்களுடைய அழைப்பில் ஒன்றுகூடும் தமிழ் அரசில்வாதிகளின் விருப்பங்களும் பிரச்சினைக்குரியது அல்ல - மாறாக சிறந்தது, ஆனால் அதனை எவ்வாறு சாத்தியப்படுத்துவது? எந்தவொரு தீர்வு பற்றியும் கலந்தோசிக்கலாம் - அதனை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கலாம் ஆனால் அதனை ஏன் அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் - அதற்கான நிர்பந்தம் என்ன? அரசாங்கத்தை நிர்பந்திப்பதற்கான ஆற்றல் தமிழ் அரசியல்வாதிகளிடம் இருக்கின்றதா? அவ்வாறான ஆற்றலை தமிழ் அரசியல்வாதிகளால் பெறத்தான் முடியுமா? இவை எவற்றுக்கும் இல்லை என்னும் பதிலைத் தவிர வேறு சிறந்த பதில் இல்லை.

அரசியல் தீர்வு தொடர்பில் சிந்திக்க முற்படும் படித்த சமூகத்தினர் என்போர் அரசியலை ஆழமாக உற்றுநோக்க முயற்சிக்க வேண்டும். இது ஒன்றும் அணுகுண்டு தொழில்நுட்பம் அல்ல - நமது வீறாப்பை, சட்டச் செருக்கை புறமொதுக்கி, சற்று சிந்திக்க முயற்சிப்பதன் மூலம், இலகுவாக புரிந்துகொள்ள முடியும். வரலாற்றில், இலங்கை தமிழரசு கட்சி சமஸ்டிக்கு முயற்சித்தது, விளைவு தோல்வி. அதன் பின்னர் தனிநாடு என்றது - விளைவு தோல்வி. ஆயுத பலத்தின் மூலம் தமிழ் மக்களுக்கான விடுதலையை அடைய முடியும் என்று தமிழ் இயக்கங்கள் முழக்கமிட்டன - விளைவு தோல்வி. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக்காக தனித்து யுத்தம் செய்தது - விளைவு தோல்வி. இந்தக் காலத்தில் பல சந்திப்புக்கள், திரைக்கு முன்னும், திரைக்கு பின்னும் இடம்பெற்றது ஆனால் எதுவும் சாதகமான விளைவுகளைத் தரவில்லை. இந்தக் காலகட்டத்தில் எத்தனையோ சட்ட நிபுனர்களை தமிழ் சமூகம் கண்டிருக்கின்றது. எத்தனையோ புரட்சியாளர்களை கண்டுவிட்டது? தியாகங்களை கண்டுவிட்டது? அர்பணிப்புக்களை கண்டுவிட்டது. ஒரு சிறிய இனம் அதன் ஆற்றலுக்கும் வளத்திற்கும் அதிகமாகவே இழந்துவிட்டது. இத்தனை விடயங்களால் நடக்காத ஒன்றையா நீங்கள் நடத்திக் காண்பிக்கப் போகின்றீர்கள்? நீங்கள் சாதாரணமாக ஒருசிலர் கூடி மேற்கொள்ளும் தீர்மானங்களால் மாற்றங்கள் நிகழும் என்பதை உங்களால் கூட நம்ப முடியாத போது, அதனை மக்கள் நம்ப வேண்டும் என்று எண்ணுவது எவ்வளவு மோசமானதொரு செயல்.

ஆனால் யுத்தத்தின் போதும் யுத்தத்திற்கு பின்னரும் ஒரு விடயம் அப்படியே இருக்கின்றது - அதுதான் மாகாண சபை. அரசியலமைப்பின் பதின்மூன்றில் உள்ளவற்றில் எதனை, எவ்வாறு அமுல்படுத்துவது என்பதில் முரண்பாடுகள் இப்போதும் இருகின்றன. அது இனியும் தொடரலாம் ஆனால் 38 ஆண்டுகளுக்கு பின்னரும் இப்போதும் அதனைத் தாண்டிய ஒன்றைப் பற்றி தென்னிலங்கையிடம் பதில் இல்லை. அது தோல்வியடைந்தது என்று சிலர் கூறலாம் - அதே போன்று அதில் போதாமையுள்ளது என்று இன்னொரு தரப்பு கூறலாம் ஆனால் அவ்வாறு கூறுபவர்களிடம் அதனைத் தாண்டிச் செல்லுவதற்கான தெரிவுகள் இல்லை. அவ்வாறாயின் ஈழத் தமிழர்கள் மத்தியில் அரசியலை படிக்க முயற்சிப்பவர்கள் எது பற்றி சிந்திக்க வேண்டும்? எதனடிப்படையில் தமிழ் கட்சிகள் மத்தியில் உடன்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்?

இலங்கையின் அரசியல் நிலைமையை பொறுத்தவரையில், சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை அடைய வேண்டுமாயின், அதற்கு ஒரேயொரு வாய்ப்புத்தான் உண்டு - அதாவது, இந்த நாட்டின் பெரும்பான்மையான சிங்கள மக்களை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் சமூகம் இணங்கினால் மட்டும்தான், அது சாத்தியப்படும் ஆனால், அந்த அதிசயம் இலங்கைத் தீவில் நிகழும் என்று நம்பினால், அது முயலில் கொம்பு கிடைக்குமென்று நம்புவதற்கு ஒப்பானது. அது ஒரு போதும் நடக்காது. அவ்வாறாயின் தமிழ் அரசியல்வாதிகளும், புத்திஜீவிகள் என்போரும், சிவில் சமூகத்தினரும், கருத்துருவாக்கிகளும் (அனைவரும் அல்லர்) எந்த அடிப்படையில் சமஸ்டி பற்றி பேசிவருகின்றனர்? இந்த இடத்தில்தான் தமிழர்கள் படித்த சமூகம் என்பதையும் தாண்டி, அரசியலை படித்த சமூகமா என்னும் கேள்வி எழுகின்றது. அரசியலை படித்த ஒரு சமூகம் எப்படியானதாக இருக்கும் - இருக்க வேண்டும்? அந்த சமூகம், தனது கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்ள முயற்சிக்கும், தன்னை புதுப்பித்துக் கொள்ள முயற்சிக்கும், வெறும் கற்பனைகளுக்குள் தன்னை புதைத்துக் கொள்ளாது. யுத்தத்தின் முடிவும் அதன் பின்னரான கடந்த பதினேழு ஆண்டு கால அரசியல் அனுபவங்களையும் தொகுத்துப் பார்த்தால், ஈழத் தமிழர் சமூகம் அரசியல் ரீதியில், ஒரு படித்த சமூகம் என்பதற்கான சான்றுகளை, பெரியளவில் காண முடியில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பரீட்சை முடிவுகளும் ஆசிரியர்களின் 'வோல்டேஜ்ஜும்'!



நிலாந்தன்

பரீட்சைமுடிவுகள் வெளிவந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில், சிலவாரங்களுக்கு முன்னதாக ஈழத்தமிழ் சமூகவலைத்தளங்களில் ஆங்காங்கே விவாதிக்கப்பட்ட ஒருகாணொளியை இங்கு குறிப்பிட வேண்டும். இக்காணொளி வெளிவந்து இரண்டுஆண்டுகள். காணொளியில் பேசியிருப்பவர் தமிழ்நாட்டைச்சேர்ந்த பேராசிரியர் ஜெயந்தசிறி. அவர்சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்தார். இங்கு அவர் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஊக்கமூட்டும் உரைகளை ஆற்றியிருக்கிறார்.

தன்னுடைய யாழ் விஜயத்தின் விளைவாக அவர் பெற்றுக்கொண்ட அனுபவங்களின் அடிப்படையில், தமிழ்நாடு, கோவையில் ஓரிடத்தில் உரையாற்றும் போது அவர் 'யாழ்ப்பாணத்து ஆசிரியர்களுக்கு வோல்டேஜ்குறைவு' என்று கூறியிருக்கிறார். அதைக்குறித்து யாழ்ப்பாணம், கோப்பாய் ஆசிரியர்கலாசாலையைச் சேர்ந்த ஒருவிரிவுரையாளர் அவரிடம் கேள்வி கேட்கிறார். அந்தக்கேள்விக்கு ஜெயந்தசிறி கூறும் பதில் அக்காணொளியில் உண்டு.

தனது உரையில் ஜெயந்தசிறி 'வோல்டேஜ்' என்றுதான் கருதுவது 'அறிவுரீதியான வோல்டேஜ் மற்றும் மொழி அறிவு ஆகிய இரண்டையும் என்று கூறுகிறார். அதாவது தொடர்ச்சியாக வாசிப்பதன் மூலம் பரந்துபட்டதளத்தில் தமது அறிவையும் மொழி அறிவையும் ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர் கூறுகிறார். மேலும் "உங்கள் பிள்ளைகளை படித்த ஆசிரியர்களிடம் அனுப்பாமல், படித்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்களிடம் அனுப்புங்கள்" என்றும் கூறுகிறார். அதாவது தன்னைத்தானே அப்டேட் செய்துகொள்ளும் ஆசிரியரிடம் அனுப்பவேண்டும் என்று கூறுகிறார்.

உயர்தரப்பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்திருக்கும் இக்காலகட்டத்தில் தமிழ்ப்பகுதிகளில் பிள்ளைகள்பெற்ற வெற்றிகளைத் தொகுத்துப்பார்க்கும் போது ஆசிரியர்களின் வோல்டேஜ் கவலைப்படும் அளவுக்குக்குறையவில்லை என்று எடுத்துக்கொள்ளலாமா? அல்லது அதுபொருத்தமான வோல்டேஜ்ஜா என்றுகேட்கலாமா?

நாட்டில் நடப்பில் இருப்பது ஒரு பரீட்சைமையக் கல்விமுறை. தேசிய அளவிலான போட்டிப்பரீட்சைகளை நோக்கி பிள்ளைகளைத் தயார்படுத்த வேண்டும். அதைப்பிள்ளைகள் மற்றும் பெற்றோரின் பிரயோக உளவியல் அர்த்தத்தில் சொன்னால், பந்தயக்குதிரைகளை பந்தயத்திற்குப் பழக்கி எடுக்க வேண்டும். இவ்வாறு பந்தயக்குதிரைகளை பழக்குவதற்கு தேவையான வோல்டேஜ்ஜும் பேராசிரியர் கூறும் வோல்டேஜ்ஜும் ஒன்றுதானா?

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஒரு கவிஞருடைய நேர்காணலை பல ஆண்டுகளுக்கு முன்னுக்கு வாசித்த ஞாபகம். அவருடைய பெயர் மறந்துவிட்டது. அவர் ஒரு கவிஞரும் ஆசிரியரும் ஆவார். ஆவரை நேர்கண்டவர் கேட்கிறார், 'நீங்கள்ஆசிரியராக இருக்க விரும்புகிறீர்களா அல்லது கவிஞராக இருக்க விரும்புகிறீர்களா?' என்று. அதற்கு அவர்பின்வரும் பொருள்பட பதில் கூறுகிறார். 'ஆசிரியராக இருப்பது என்பது தனக்குத் தெரிந்ததை பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்துவதற்காக, ஏனைய பல விடயங்களும் தனக்குத் தெரியும் என்பதுபோல ஒருதோற்றத்தைக்காட்டுவது. ஆனால் கவிஞராக இருப்பது என்பது இயல்பானது. எனக்கு எதுதெரியும் தெரியாது என்ற அவஸ்தை இன்றி இயல்பாக இருப்பது. எனக்கு தோன்றுவதைக்கூறுவது, எழுதுவது. எனவே நான் இயல்பாக இருப்பது என்ற அடிப்படையில் ஒரு கவிஞராக இருப்பதைத்தான் அதிகமாக விரும்புகிறேன்" என்று. ஆனால் பேராசிரியர் சிவத்தம்பி கூறுவார், "தெரியாததை தெரியாது என்று சொன்னால்தான் தெரிந்ததைச் சொல்லும் போது நம்புவார்கள்" என்று.

பிள்ளைகளை ஆகர்சிக்கவும் அவர்களுடைய அகத்தைத்தூண்டவும் உயர்ந்த இலட்சியங்களை நோக்கி ஊக்கப்படுத்தவும் ஆசிரியர் பரந்தபட்ட அறிவைக்கொண்டிருக்க வேண்டும். ஜெயந்தசிறி கூறுவதுபோல சார்ஜ் அதிகமாக இருக்கவேண்டும். ஆனால் இங்கு பிரச்சனை என்னவென்றால், இலங்கைபோன்ற நாடுகளில் பரீட்சைமைய, போட்டிக்கல்விச்சூழலுக்குள் ஆசிரியர்கள் பரிட்சையை நோக்கித்தான் பிள்ளைகளை தயார்படுத்துவார்கள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# போரின் நீண்டு நிலைத்திருக்கும் நிழல்



- மீராசிறினிவாசன் -

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் நிகழ்ந்த பாலியல் வன்முறைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் இந்த வருடத்தின் தொடக்கத்தில் வெளியிட்ட புதிய அறிக்கை போரின் மிகவும் அதிர்ச்சிகரமான விளைவுகளில் ஒன்றின் மீது கவனத்தை ஈர்க்கச் செய்திருக்கிறது.

2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த அந்தப் போரில் தப்பிப்பிழைத்த பலர் இன்னனும் தீராத உடல் காயங்கள், மலட்டுத்தன்மை, உளவியல் பிரச்சினைகள் மற்றும் தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்படுகின்றனர் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

இலங்கையிலிருந்து நான் செய்திகளை வழங்கிய அனுபவம் எனக்கு மீண்டும் மீண்டும் கற்பித்த ஒரு விடயம், ஒரு போரை அத்தனை எளிதாக நாம் கடந்து சென்றுவிட முடியாது. அது தப்பிப் பிழைத்தவர்களின் உடல்களிலும் மனங்களிலும் வாழ்கிறது. அவர்கள் குணமடைய போராடும் ஒவ்வொரு நாளும் அவர்களின் நினைவுகளில் அது மீண்டும் மீண்டும் மேலெழுகிறது என்பதேயாகும்.

ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலலும் தொடுத்திருக்கும் சட்டவிரோதப் போர் மற்றும் ஈரானின் பதிலடித் தாக்குதல்கள் தொடர்பான தினசரி செய்திகளை அவதானிக்க நாம் சிரமப்படுகின்ற வேளையில், ஒன்று மட்டும் நிச்சயம், இந்த உலகம் முழுவதுமே போரின் முடிவின் செய்திக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறது.

வளைகுடா நாடுகளில் சிக்கித் தவிக்கும் புலம் பெயர் தொழிலாளர்கள் முதல், எரிபொருள் அல்லது எரிவாயுவை வாங்குவதற்கு வசதியற்ற குடும்பங்கள், மின்சாரக் கட்டணத்தை திடீரென உயர்த்த நிர்ப்பந்திக்கப்படுகின்ற அளவுக்கு பாரிய நிதி நெருக்கடியில் உள்ள அரசாங்கங்கள் வரை என நம் அனைவரினதும் நலன்கள் இதில் சம்பந்தப்பட்டிருக்கின்றது. அதிகார வெறி கொண்ட இரு மனிதர்களின் விருப்பத்தால் தொடங்கப்பட்ட ஒரு போரிலிருந்து அனைவரும் விரைவான நிம்மதியை எதிர்பார்க்கிறார்கள்.

மேற்கு ஆசியாவில் பெப்ரவரி 28 ஆம் திகதி அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டணியின் வான் வழித் தாக்குதலுடன் தொடங்கிய தற்போதைய மோதல் ஒரு மாதத்தைக் கடந்து விட்டது. இது நம் காலத்தின் பல போர்களில் ஒன்று.

2022 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஊடுருவலையடுத்து தொடங்கிய உக்ரைன் போர் இந்த ஆண்டு பெப்ரவரியில் ஐந்தாவது ஆண்டில் கால்பதித்தது. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, காசாவில் பாலஸ்தீனியர்களைக் கொல்வதை இஸ்ரேல் நிறுத்தவில்லை - அங்கு பலியானவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதேவேளை, மேற்குக் கரையில் இஸ்ரேலிய குடியேறிகள் பாலஸ்தீனர்களுக்கு எதிரான வன்முறைத் தாக்குதல்களைத் தொடர்கின்றனர்.

மேலும், இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக மோதலில் சிக்கியிருக்கும் சூடான், ஒரு பாரதூரமான மனிதாபிமானப் பேரழிவை எதிர்நோக்கி நிற்கிறது. இந்த ஆண்டு அங்கு 3 கோடி 37 இலட்சம் மக்களுக்கு உதவி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

நேரடியாக நடக்கும் ஒரு போரின் தகவல்கள் இயல்பாகவே நம் கவனத்தை ஈர்க்கின்றன. அவை வாழ்வா சாவா என்பது பற்றியவை என்பதால் அவசரமானவையாகத் தோன்றுகின்றன. இரக்கமற்ற தலைவர்கள் தங்கள் அதிகாரத்தை கொலை செய்வதற்கான உரிமமாக தவறாகக் கருதும்போது, உலகம் உண்மையிலேயே ஆபத்தான இடமாக மாறுகிறது. இது வெகு தொலைவில் இருக்கும் நம்மைக் கூட பதற்றத்துடன் தகவல்களைத் தேடியறிய வைக்கிறது.

தற்போது நடந்து வரும் போர்கள் நிறுத்தப்பட வேண்டும். போர்க் களத்தில் ஒரு போர் முடிவுக்கு வருவது என்பது வலிமிகுந்த, சவாலான, பெரும்பாலும் குழப்பமான ஒரு மீட்சிப் பாதையின் ஆரம்பம் மட்டுமே என்பதை நாம் உணரும்போது, அதன் அவசரம் இன்னும் அதிகமாகிறது.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை வெறும் எண்களாகச் சுருக்குவது, போரின் அழிவையோ அல்லது வன்முறை ஏற்படுத்தும் நீண்டகால பாதிப்பையோ முழுமையாக வெளிப்படுத்துவதில்லை.

இலங்கையில் அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகளுக்கும் இடையிலான உள்நாட்டுப் போர் முடிவடைந்து அடுத்த மாதத்துடன் 17 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இலங்கை சுமார் மூன்று தசாப்தங்களாக போரை எதிர்கொண்டது. போரின் பாதிப்பை அதிகம் சுமந்த தமிழர்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள், "போர் முடிந்திருக்கலாம், ஆனால் இன்னும் முரண்பாடுகள் தீரவில்லை" என்று கூறியவண்ணம் இருக்கிறார்கள். அது அகலாத துயரமாகவும் மன உளைச்சலாகவும், இராணுவத்திடமிருந்து தங்கள் நிலங்களை மீட்டெடுப்பதற்கான போராட்டமாகவும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் தொடர் முயற்சியாகவும் சிதைந்த பொருளாதாரத்தில் உயிர்வாழ்வதற்கான போராட்டமாகவும், தங்களுக்குத் தாங்களே ஒரு எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ள முடியுமா என்ற அச்சமாகவும் வெளிப்படுகிறது.

நாடற்றவர்களாக மாற்றப்பட்டு, கண்ணியம் பறிக்கப்பட்ட ஒரு அகதியின் வாழ்வில், போர் என்பது கடந்த கால நிகழ்வு அல்ல. அது நிகழ்காலத்தின் ஒரு தொடர்ச்சியான கருப்பொருள். தப்பிப் பிழைத்தவர்கள் உயிருடன் இருப்பதற்காக நன்றியுடையவர்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுவதையோ அல்லது அதற்கும் மேலாக, மனிதர்களாகக் கூட மதிக்கப்படாத நிலையையோ எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

கொழும்பில் எனக்கு முன்னர் "தி இந்து" வுக்காக பணியாற்றிய செய்தியாளர்கள் 1980 களில் இலங்கை உள்நாட்டுப் போரைச் செய்தியாக்கத் தொடங்கினர். நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் நானும் அதைச் செய்தியாக்குவதை நிறுத்தவில்லை.



பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட இறுதிப் போர் நடந்த இடமான முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞர் சுந்தரம் அனோஜன் சமீபத்தில் "தி இந்து" நாளிதழுக்கு அளித்த பேட்டியில் "எனது வாழ்க்கையை நான் போருக்கு முன்னரானதாகவும் பின்னரானதாகவும் இரண்டு கட்டங்களாகப் பார்க்கிறேன்." என்று குறிப்பிட்டார்.

ஒரு போர் வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றியமைக்கிறது. அது பேரழிவின் தடயங்களை விட்டுச் செல்கிறது, அதன் பின்விளைவுகள் தப்பிப் பிழைத்தவர்களை நீண்ட காலத்திற்கு அச்சுறுத்துகின்றன. போர் என்பது ஒன்றும் காணொளி விளையாட்டு (Video game) அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போராளிகளை நோக்கிய சுமந்திரன் அணியின் அழைப்பு டீலா? நோ டீலா?



கந்தையா அருந்தவபாலன்

அவசியமற்ற விடயங்கள் தொடர்பில் சாதாரண மக்களுக்கு இருக்கக்கூடிய இயல்பான மறதிக்குணம் அரசியல்வாதிகளுக்கான வரப்பிரசாதங்களில் ஒன்று. ஆனால் அவ்வரப்பிரசாதம் முன்னைய அரசியல்வாதிகளுக்கு இருந்ததைப் போல தற்போதைய அரசியல்வாதிகளுக்கு இல்லை. முன்பு ஒரு அரசியல்வாதி தான் முன்பு கூறியவற்றுக்கு எதிர்மாறாக பின்னர் தோசை புரட்டுவதுபோலப் புரட்டிக் கூறினாலும் அது மக்களிடம் எடுபடும். ஏனெனில் முன்னர் அவர் கூறியதை உடனடியாக மக்களிடம் கொண்டு செல்வதற்கான தொழில்நுட்ப வாய்ப்புகள் அப்போது இருக்கவில்லை. ஆனால் தற்போது அப்படியில்லை. அரசியல்வாதி முன்னர் கூறியதை அப்படியே காணொலிகளாக சமூக ஊடகங்கள் உடனடியாகவே ஒவ்வொருவரின் விரல்நுனியில் செருகிவிடுகின்றன. அவ்வாறான முக்கிய இருவிடயங்கள் கடந்தசில நாட்களில் சமூக ஊடகங்களில் வலம்வந்ததைப் பார்க்க முடிந்தது. ஒன்று அண்மையில் எரிபொருட்களின் விலை பெருமளவால் அதிகரிக்கப்பட்டபோது, முன்னர் தேர்தல் பரப்புரைகளின்போது அனுர தாம் பதவிக்கு வந்தால் எரிபொருட்களின் விலைகளை மூன்றில் ஒன்றாகக் குறைப்பேன் என்று கூறியது. மற்றது அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் அணியினர் போராளிகளைத் தம்முடன் இணைப்பதற்காக அப்போராளிகள் தொடர்பாக கிளிநொச்சியில் உதிர்ந்த வார்த்தைகளும் முன்னர் போராளிகள் தொடர்பில் அவர்கள் உமிழ்ந்த வார்த்தைகளும் செய்த நடத்தைகளும்.

சுமந்திரனோ அல்லது அவரது நெருங்கிய அரசியல் கூட்டாளிகளோ எவரும் விடுதலைப் புலிகள் மீதும் அவர்களது போராட்டம் மீதும் நேர்மறை எண்ணமுடையவர்காளாக இருந்ததில்லை. அதனை அவர்கள் வெளிப்படையாகவே தமது சொல்,செயல் இரு வழிகளிலும் வெளிப்படுத்தியே வந்துள்ளனர். சரி பிழை அல்லது மக்கள் ஏற்கிறார்களா இல்லையா என்பதற்கப்பால் கடந்த பாராளுமன்றத் தேர்தல்வரை தனது நிலைப்பாட்டில் சுமந்திரன் அதில் உறுதியாயிருந்ததையும் அதன்பின்னர் அந்த உறுதிப்பாட்டில் தளர்வு ஏற்பட்டு வருவதையும் அவதானிக்க முடியும். அந்தத் தளர்வின் உச்சத்தைத்தான் அண்மைய போராளிகளுடனான கலந்துரையாடலில் அவர்களின் வெளிப்பாடுகள் எடுத்துக்கூறுகின்றன. சுமந்திரன் அணியின் இந்த மாற்றம் அவர்களின் உண்மையான மனமாற்றமா அல்லது பாராளுமன்றத் தேர்தல் தந்த படிப்பினையும் மாகாண முதலமைச்சருக்கான கனவுந்தான் காரணமா? சுமந்திரன் அணியைச் சேர்ந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சயந்தனின் வார்த்தைகளிலேயே கூறுவதானால் இது டீலா அல்லது நோ டீலா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கமும் விடுதலைப்புலிகளுடனான இணக்கப்பாடும் ஒரு 'டீல்' என்ற கருத்தை 2018 இல் கொழும்பில் கம்பன் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அரசியல் கருத்தரங்கொன்றில் சயந்தன் கூறியிருந்தார். விடுதலைப் புலிகளுடன் தேர்தலில் ஈடுபடுவது தொடர்பாக ஓர் இணக்கப்பாட்டுக்குப் போகாவிட்டால் அவர்கள் தேர்தலில் இறங்கினால் தம்மைச் சுட்டுக் கொன்றுவிடுவார்கள் என்றதன் காரணமாகவே முன்னைய அரசியல்வாதிகள் விடுதலைப்புலிகளுடன் இணங்கிப் போனார்கள் என்றும் அது ஒருவகையான டீல் என்றும் சயந்தன் கூறியிருந்தார். விடுதலைப் புலிகளைப் பொறுத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பை தத்தெடுத்து வளர்த்தது இவர்கள் கூறுவது போன்ற டீல் அல்ல. அது ஆயுதப் போராட்டத்தின் நியாயத் தன்மைய தேசிய, சர்வதேச ரீதியில் நிறுவுவதற்கான ஒரு ஜனநாயக முகத்துக்கான தேவை. ஆனால் சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக்கட்சியின் யுத்தத்தின் பின்னரான செயற்பாடுகள் அது அதனை ஒரு டீலாகவே கருதிச் செயற்பட்டது போலவே அமைந்திருந்தன.

**புலிநீக்க அரசியலில் தொடங்கி, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை உடைத்து இறுதியில் தமிழரசுக்கட்சியை பிளந்து தமிழத்தேசியத்தை குற்றுயிராக்கிவிட்டு அதன் இறுதி ஊர்வலத்தில் பங்குகொள்வதற்காக இப்போது போராளிகள் அழைக்கப்படுகிறார்களோ என்றுதான் எண்ணத்தோன்றுகிறது.**



அந்நியன் திரைப்படத்தில் வருவது போல விடுதலைப்புலிகள் காலத்தில் அம்பியாகவும் பின்னர் அந்நியனாகவும் தோன்றிய சம்பந்தனின் இருமுகத்தையும் தமிழ் மக்கள் நன்கறிவர். அதனை அவரின் இறுதி நிகழ்வுகள் காட்டிநின்றன. ஆனால் 2010 க்குப் பின்னரே அரங்கத்துக்கு வந்த சுமந்திரனின் ஒரேமுகமான அந்நியன் முகத்தையே தொடர்ந்து பார்த்து வந்தவர்க்கு தற்போது அவர் அம்பியாக நடிக்க விரும்புகிறாரோ என்ற ஐயம் எழுவது இயற்கை. சுமந்திரன் அரங்கத்துக்கு வந்தார் என்பதைவிட தனது நிலைப்பாட்டை தக்கவைக்க சம்பந்தனால் சுமந்திரன் கொண்டு வரப்பட்டார் என்பதே பொருத்தமாக இருக்கும். அல்லது ஒத்த முனைகள் ஒன்றையொன்று கவர்ந்து கொண்டன எனவும் கருதலாம். என்ன நோக்கத்துக்காக சுமந்திரன் கொண்டுவரப்பட்டாரோ அதனை சம்பந்தன் எள்ளென்றால் சுமந்திரன் எண்ணெய்யாகவே செய்துமுடித்தார். புலிநீக்க அரசியலில் தொடங்கி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை உடைத்து இறுதியில் தமிழரசுக்கட்சியை பிளந்து தமிழத்தேசியத்தை குற்றுயிராக்கிவிட்டு அதன் இறுதி ஊர்வலத்தில் பங்குகொள்வதற்காக இப்போது போராளிகள் அழைக்கப்படுகிறார்களோ என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் இந்த முயற்சி கட்சியைப் பலப்படுத்துவதற்கானதன்று. கட்சியின் பிளவை மேலும் வலுப்படுத்துவதற்கானது மட்டுமன்றி போராளிகளையும் மேலும் கூறுபோடுவதற்கான இன்னொரு முயற்சி என்பது போராளிகளுக்கும் தெரியும்.

யுத்தம் முடியும்வரை சிங்கள ஆட்சியாளர்களே புலிகளைப் பயங்கரவாதிகள் என்றார்கள். ஆனால் யுத்தத்தின்பின் சம்பந்தனும் சுமந்திரனும் அவர்களுடன் இணைந்துவிட்டனர். முன்னர் தேசிய வீரர்கள் எனப்போற்றிய சம்பந்தனின் வாய் பின்னர் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பயங்கரவாதிகள் என உச்சரிக்கத்தொடங்கியது. அவ்வாயே பயங்கரவாதிகளை அழித்ததால்தான் திருகோணமலைக்குச் சுதந்திரமாகச் செல்லமுடிகிறது என்றது. சிறையிலுள்ள போராளிகளை உங்களால்தான் விடுவிக்கமுடியும், உதவிசெய்யுங்கள் என்று கெஞ்சிய குரலுக்கு திறப்பு என்னிடமில்லை என ஏளனம் செய்தது. அவரது சீடனின் வாயோ ஒருபடி மேலேசென்று புலிகளால் கடத்தப்பட்ட எவரும் உயிருடன் திரும்பவில்லை, அதுபற்றியும் விசாரிக்கவேண்டும் என்று சட்டமுரைத்தது. புலிகளின் இனச்சுத்திகரிப்பையிட்டு தலைகுனிவதாகவும் கவலைப்பட்டது.

இவற்றை விட்டுவிடுவோம். யுத்தத்தின் பின்னர் பலவேறு நெருக்கடிக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் இப்போராளிகளின் வாழ்க்கைக்காக இதுவரை இவர்களால் செய்யப்பட்ட உருப்படியான விடயங்கள் ஏதுமுண்டா? உடலுறுப்புகளை இழந்தவர்கள், தொழிலேதும் இல்லாதவர்கள், தலைவனை இழந்த குடும்பங்கள், சொந்த இருப்பிடமற்றவர்கள் என ஆயிரமாயிரம் போராளிகளுக்கும் குடும்பங்களுக்கும் இவர்களால் செய்யப்பட்ட உதவிகள் எவை? ஐந்தாண்டுகள் இவர்களின் கைவசமிருந்த மாகாணசபைகளால் இவர்களுக்கென்று சிறப்பான உதவித் திட்டங்களைச் செய்யாமல் போனமைக்கான காரணம் என்ன? நல்லாட்சிக்கு முண்டுகொடுத்து தங்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட இவர்களால் அல்லலுறும் போராளிகளின் வாழ்வுக்காக ஏன் ஒரு பொதுவான புனர்வாழ்வுத் திட்டத்தை உருவாக்க முடியாமல் போனது. இதனைச் செய்வதற்கு சட்டங்களோ அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளோ தேவையில்லையே. இவ்வாறு செய்ய வேண்டிய நேரத்தில் செய்யமுடிந்தவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டு இப்போது அவர்களைப்பார்த்து முதலைக்கண்ணீர் வடிப்பதையும் வெற்றிலைவைத்து அழைப்பதையும் எவ்வாறு புரிந்துகொள்வது?


உண்மையில் போராளிகளை கட்சி சார்ந்த அரசியலுக்குள் உள்ளீர்ப்பதற்கான முயற்சியை தமிழரசுக்கட்சி 2015 க்கு முன்னரே எடுத்திருக்கவேண்டும். அதுவும் தமிழரசுக்கட்சியாகவன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக. ஏனெனில் குறித்த கலந்துரையாடலில் போராளியொருவர் சுட்டிக்காட்டியது போல தலைவர் மக்களுக்குச் சுட்டிக்காட்டியது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையே அன்றி வீட்டையன்று. அப்போது தீண்டத்தகாதவர்களாகவும் வன்முறையாளர்களாகவும் பயங்கரவாதிகளாகவும் இவர்களுக்குத் தெரிந்தவர்கள் இப்போது எப்படி தேசப்பற்றாளராக மாறினார்கள்? 2015 இல் போராளிகள் ஓர் அமைப்பாக இணைந்து தேர்தலில் போட்டியிட தாமாகவே முன்வந்த போது அவர்கள் அரசின் கைக்கூலிகள் என்றவர்களுக்கு இப்போது மட்டும் அவர்கள் தியாகிகளாகத் தெரிவது ஏன்? இது உண்மையான மனமாற்றமா? அல்லது மூத்த போராளியொருவர் கூறியது போல தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு போராளிகளை **'BRAND'** ஆகப் பயன்படுத்துவதற்கான முன்னெடுப்பா? இதனை அவர்களின் வார்த்தையில் கூறுவதானால் இதுவும் ஒரு டீலா?. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நேட்டோவில் இருந்து அமெரிக்கா விலகுமா?

## ஈரானுடன் போரிடாத நேட்டோ ஒரு காகிதப் புலி!

ஐங்கரன் விக்கினேஸ்வரா






**நேட்டோவிலிருந்து அமெரிக்காவின் பின்வாங்கல் அறிவிப்பு ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்துள்ளது. இத்தாலி, ஸ்பெயின் ஈரானுக்கு எதிரான தாக்குதலுக்குத் தங்கள் வான்பரப்பைப் பயன்படுத்த அனுமதி மறுத்ததே இந்த விரிசலுக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகிறது.**

நேட்டோ அமைப்பில் இருந்து விலகுவது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தீவிரமாக ஆலோசித்து வருவதாக தெரிவித்துள்ளார். நேட்டோ உறுப்பு நாடுகள் தங்களின் பாதுகாப்புப் பணிகளுக்குப் போதிய நிதி வழங்கவில்லை என்றும், ஈரானுக்கு எதிரான விவகாரத்தில் ஆதரவு அளிக்கவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ள அவர், நேட்டோவை "காகிதப் புலி" என்றும் விமர்சித்துள்ளார்.

வளைகுடா போர் ஒரு மாதத்திற்கு மேலாகத் தொடர்கிறது. இந்த போரை முடிவுக்குக் கொண்டு வர முடியாமல் திணறும் ட்ரம்ப், நேட்டோ நாடுகளிடம் உதவி கேட்டு வந்தார். இருப்பினும், அவை உதவ மறுத்ததை அடுத்து, நேட்டோ மீது ட்ரம்ப் சீறிப் பாய்ந்துள்ளார். ஆனால் 2023இல் இயற்றப்பட்ட சட்டத்தின்படி, அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் அல்லது செனட் சபையின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாமல் அதிபர் தன்னிச்சையாக நேட்டோவிலிருந்து விலக முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கா விலகினால் அது சர்வதேச அளவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.ஆனாலும் இதற்கு சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் இருப்பதால், இது உடனடியாக நடக்குமா என்பது கேள்விக்குறியே. அத்துடன் நேட்டோவிலிருந்து அமெரிக்கா வெளியேறுவது, ஐரோப்பாவின் வரலாற்றில் மிகப்பெரிய பாதுகாப்பு நெருக்கடியாக மாறும். ட்ரம்பின் இந்த மிரட்டலால் உலகளாவிய பங்குச் சந்தைகள் சரிவைச் சந்தித்துள்ளதுடன், சர்வதேச அரசியல் சூழலே தலைகீழாக மாறும் சூழல் உருவாக வாய்ப்புள்ளதாக ஐரோப்பிய அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

### நேட்டோ உடையுமா ?

வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பான நேட்டோ, 30 ஐரோப்பியா நாடுகள் மற்றும் 2 வட அமெரிக்க நாடுகள் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் இந்த அமைப்பு உருவானது. கூட்டு பாதுகாப்பை உறுதி செய்வது தான் இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும். இதன் உறுப்பு நாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல், அது அனைத்து உறுப்பு நாடுகளின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகவே கருதப்படும்.


உலக நாடுகளுக்குக் கூட்டு பாதுகாப்பை வழங்கவும் பனிப்போர் காலத்தில் சோவியத் ஒன்றியம் மேலும் பரவாமல் இருக்கவும் உருவாக்கப்பட்டதே நேட்டோ.

நேட்டோவின் மிக முக்கிய உறுப்பினரான அமெரிக்கா தற்போதய சூழலில், அதில் இருந்து விலகவுள்ளதாக கூறியுள்ளமை பெரும் சர்ச்சையாகியுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவின் பாதுகாப்பிற்கு முதுகெலும்பாக விளங்கிய நேட்டோவிலிருந்து அமெரிக்கா விலகினால், ரஷ்யாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்வது சாத்தியமற்றது என ஐரோப்பிய பாதுகாப்பு வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது "ஐரோப்பியப் பாதுகாப்புத் தூணை" வலுப்படுத்தவும், அமெரிக்கா இன்றித் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் போர் ஒத்திகைகளை நடத்தவும் அவசர அழைப்பு விடுத்துள்ளனர்.

### நேட்டோ விரிவாக்கம் எதுவரை?

1949 ஆரம்பத்தில் 12 உறுப்பு நாடுகளை கொண்ட நேட்டோவில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், டென்மார்க், பெல்ஜியம், நோர்வே, போர்த்துகல், நெதர்லாந்து, இத்தாலி, ஐஸ்லாந்து மற்றும் லக்ஸம்பர்க் போன்ற நாடுகள் இதில் இடம் பெற்றன. பின்னர் கிரேக்க தேசம், துருக்கி 1952இல் இணைந்தன. மேற்கு ஜெர்மனி 1955லும், ஸ்பெய்ன் 1982லும் இணைந்தன.






பனிப்போரின் முடிவில் வார்சோ ஒப்பந்தமும் முடிவுக்கு வந்தது. 1991ம் ஆண்டு வாரசோ ஒப்பந்தம் கலைக்கப்பட்டதாக அதிகாரப்பூர்வ அறிவிப்புகளும் வெளியிடப்பட்டன. முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் நட்பு நாடுகளாக இருந்த செக் குடியரசு, ஹங்கேரி, போலாந்து போன்ற நாடுகள், சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்கு பிறகு 1999ல் நேட்டோவுடன் இணைந்தன.

இதன் பின்னர் பல்கேரியா, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா, ருமேனியா, ஸ்லோவாக்கியா மற்றும் ஸ்லோவேனியா 2004ம் ஆண்டிலும், அல்பானியா, குரோசியா 2009ம் ஆண்டிலும் மோண்டேனேக்ரோ 2017ம் ஆண்டிலும், 2020ம் ஆண்டில் வடக்கு மசிடோனியாவும் நேட்டோவில் இணைந்தன.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் நேட்டோ விரிவாக்கத்தால் புடினின் ஆட்சியின் கீழ் இருக்கும் ரஷ்யா தொடர்ந்து மேற்கு நாடுகள் மீதான அச்சத்தையும் சந்தேக பார்வையையும் எப்போதுமே கொண்டிருக்கிறது. ரஷ்யாவுடன் எல்லைகளை பகிர்ந்து கொண்டுள்ள மூன்று பால்டிக் நாடுகளும் தற்போது நேட்டோ உறுப்பினர்களாக இருக்கின்றமை ரஷ்யாவின் பாதுகாப்பை அச்சுறுத்தலாக்கி உள்ளது.

### நேட்டோ ஒரு காகிதப் புலி:

அமெரிக்க அதிபர் ட்ரம்ப், நேட்டோ அமைப்பை ஒரு "காகிதப் புலி" என விமர்சித்துள்ளதுடன், ஈரானுக்கு எதிரான 'ஆபரேஷன் எபிக் பியூரி" போரில் ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை என்பதே ட்ரம்பின் இந்த ஆத்திரத்திற்குக் காரணமாகும். நாங்கள் உதவி கேட்டபோது அவர்கள் நண்பர்களாக நடந்து கொள்ளவில்லை. எனவே நேட்டோவில் நீடிப்பது குறித்து நாங்கள் எடுக்கும் முடிவு வெறும் பரிசீலனை மட்டுமல்ல, அதற்கும் மேலானது என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பாவிற்கு ஒரு ஆபத்து என்றால் நாங்கள் ஓடிச் சென்று பாதுகாக்கிறோம். ஆனால் எங்களுக்கு ஒரு தேவை வரும்போது தங்களின் ராணுவத் தளங்களைப் பயன்படுத்த அவர்கள் 'இல்லை' என்று சொல்கிறார்கள். இது ஒரு ஒருதலைப்பட்சமான உறவு என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ரூபியோ சாடியுள்ளார். அந்த அமைப்பில் இருந்து அமெரிக்கா வெளியேறுவது குறித்துத் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகவும் அமைச்சர் மார்கோ ரூபியோவும் ட்ரம்பின் கருத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.

ஸ்பெயின் மற்றும் இத்தாலி போன்ற நாடுகள் ஈரானுக்கு எதிரான தாக்குதலுக்குத் தங்கள் வான்பரப்பைப் பயன்படுத்த அனுமதி மறுத்ததே இந்த விரிசலுக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் இந்தத் திடீர் பின்வாங்கல் அறிவிப்பு ஐரோப்பிய நாடுகளை நிலைகுலையச் செய்துள்ளது.

### ஐரோப்பிய கூட்டு பாதுகாப்பு முறிவு

வட அத்திலாந்திய ஒப்பந்த அமைப்பு ஏப்ரல் 4, 1949-ல் வாஷிங்டனில் கையெழுத்தான ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்பட்டது. உறுப்பு நாடுகளின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பைப் பேணுதல், ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாத்தல் மற்றும் இராணுவ ரீதியாக ஒருவருக்கொருவர் உதவுதல் அவசியம் ஆகும். இதற்காகவே நிறுவப்பட்ட வட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளின் ஒரு கூட்டு இராணுவக் கூட்டணியாகும். இது உறுப்பினர்களின் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டது. பெல்ஜியத்தின் பிரசல்ஸை தலைமையிடமாகக் கொண்டு, தற்போது 32 உறுப்பு நாடுகளுடன் இயங்கி வருகிறது.

நேட்டோவின் கடந்த கால நடவடிக்கைகள் பல ரஷ்ய சார்பு நாடுகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக சேர்பிய போரில் நேட்டோவின் பங்கு முக்கியமானது. நேட்டோவை மேலும் வலுப்படுத்த 2035-க்குள் உறுப்பினர்கள் தங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 வீதம் பாதுகாப்பிற்காக முதலீடு செய்ய வேண்டும்




என்ற இலக்கை அடைய அமெரிக்க அரசு வலியுறுத்துகிறது.

### ஈரான் போரில் ஆதரவு தராத நேட்டோ

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஈரான் தொடர்ந்தும் ஹோர்முஸ் நீரிணையை மூடி உலக நாடுகளின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அந்த நீரிணையை திறப்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி நேட்டோ நாடுகளின் உதவியை கோரியிருந்தார்.

இந்நிலையில் அவரது அழைப்பு நேரடியாகவே நேட்டோ நாடுகள் நிராகரித்த நிலையில், ட்ரம்ப் நேட்டோ நாடுகளை இவ்வாறு விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஈரான் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவு தராத நேட்டோ நாடுகளை 'கோழைகள்' என அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

அமெரிக்கா இல்லையென்றால் நேட்டோ வெறும் காகித புலி மட்டுமே. அணுசக்தி பலம் கொண்ட ஈரானை தடுக்கும் இது போரில் நேட்டோ அமைப்பின் உறுப்பினர்கள் பங்கேற்க மறுத்துவிட்டது. இதை குற்றச்சாட்டாக முன்வைக்கிறேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையை இயல்பு நிலைக்கு திறக்க நேட்டோ உதவ முன்வரவில்லை. சிறிய ராணுவ தந்திர நடவடிக்கை மூலம் இதை சாத்தியம் செய்திருக்கலாம். அதற்கு மாறாக கச்சா எண்ணெய் விலை அதிகரித்து விட்டது என குறை சொல்லி வருகின்றனர், அவர்கள் கோழைகள் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரித்தானியாவிடம் கடற்படை கூட இல்லை. நீங்கள் மிகவும் பழமையாகிவிட்டீர்கள், என கடுமையாக ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பரீட்சை முடிவுகளும்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பந்தயக்குதிரைகளை தயார்படுத்துவதுபோல. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இருந்து இந்தப்பந்தயம் தொடங்குகிறது. எனவே பந்தயக் குதிரைகளைத் தயார்படுத்தும் ஓர் ஆசிரியர் அந்தக்குதிரையை பரீட்சையை நோக்கித்தான் பயிறுவிக்கலாம். அதற்கு வெளியே போனால், சிறுவர் வகுப்புகளில், பெற்றோர் அதை அனுமதிப்பார்களா? அல்லது வளர்ந்த பிள்ளைகளின் வகுப்புக்களில் பிள்ளைகள் அதுபாடத்திட்டதுக்கு வெளியே போகிறது என்று கருதினால்? தனது கற்றல்வேளை வீணாக்கப்படுகிறது என்று முறைப்பாடு செய்தால்?

அதுமட்டுமல்ல பந்தயக்குதிரைகளை அதிகம்பயிற்றுவிப்பது தனியார் கல்வி நிறுவனங்கள்தான். தேசியப் பரீட்சைகளில் போட்டியிடும் பந்தயக்குதிரைகள் பெருமளவுக்கு தனியார் கல்வி நிறுவனங்களில் தான் தங்கியிருக்கிறார்கள். ஒப்பீட்டளவில் குறைந்த அளவுக்கே பாடசாலைகளில் தங்கியிருக்கிறார்கள்.

சில பாடசாலைகளில் மிக அரிதான புறநடைகள் உண்டு. அங்கெல்லாம் சில ஆசிரியர்கள் பந்தயக்குதிரைகளை முழுமையாகப் பொறுப்பெடுத்து பரீட்சைகளுக்குத் தயார்படுத்துகிறார்கள். தங்களிடம் படிக்கும் பிள்ளைகளை தனியார் கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. ஆதை ஒரு தவம் போல அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள் ஆனால் அது ஒரு பொதுவான தோற்றப்பாடு அல்ல. இந்த ஆசிரியர்களும் கூட எந்த வகை வோல்டேஜ்ஜை கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வி இங்கு முக்கியம். ஏனென்றால் நாட்டின் கல்வி முறைமை எதுவோ அதற்குவேண்டிய வோல்டேஜ்ஜைத்தான் கல்விக் கட்டமைப்பு ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கும். அதுபோலவே மாணவர்களும் பெற்றோர்களும் அதாவது பந்தயக்குதிரைகளும் அவற்றின் பெற்றோரும் அந்த வோல்டேஜ்ஜைக் கொண்டிருக்கும் ஆசிரியரைத்தான் தேடிப்போவார்கள். இங்கே எது பொருத்தமான வோல்ட்டேஜ் என்பதனை கல்வியின் பிரயோக நோக்கந்தான் தீர்மானிக்கிறது. அதைமீறி ஆசிரியர்களால் அதைத் தீர்மானிக்கமுடியுமா?

பரீட்சைமைய, போட்டிக்கல்வியில் கரணம் தப்பினால் மரணம் என்று வாழ்க்கை வெறுத்துப் படிக்கும் பிள்ளைகள் பந்தயத்தில் எப்படி ஜெயிப்பது என்றுதான் சிந்திப்பார்களே தவிர ஒரு முழு மனிதப்பிறவியாக தமது ஆளுமையை முழுமையாகக் கட்டியெழுப்பும் விடயங்களைக் குறித்து சிந்திப்பதற்கு அவர்களுக்கு நேரம்உண்டா? அவ்வாறு சிந்திப்பதற்கு கல்வி முறையும் பெற்றோரும் அவர்களை விடுவார்களா?

இதில் விதிவிலக்கான பெற்றோரும் பிள்ளைகளும் உண்டு. அசாதாரணமான பிள்ளைகளும் உண்டு. அவர்கள் ஒரே சமயத்தில் பந்தயத்திலும் ஜெயிக்கிறார்கள் வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய அறிவையும் திரட்டிக்கொள்கிறார்கள். ஆனால் இது ஒரு பொதுப்போக்கு அல்ல. இப்படிப்பட்டதோர் கல்விச்சூழலுக்குள் பந்தயக்குதிரைகளைப் பயிற்றுவிப்பதற்கும் குதிரைகளின் முழுமையான ஆளுமையைச் செதுக்குவதற்குமிடையில் ஏதோஒரு சமநிலையைக் கண்டுபிடிக்க வேண்டும்.

பாடசாலைகள் தான் முழு மனித ஆளுமையைச் செதுக்கத் தேவையான வாய்ப்புகளையும் வளங்களையும் கொண்டிருக்கின்றன. தனியார் கல்விநிறுவனங்கள் அல்ல. தனியார் கல்விநிறுவனங்கள் பெருமளவுக்கு வணிக நோக்கங்களைக் கொண்டவை. அங்கே குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்தயக்குதிரைகளைப் பழக்கி எடுக்க வேண்டும். அங்கே நோக்கம் பந்தயம்தான். ஆனால் பாடசாலையின் நோக்கம் அதுவல்ல. ஆனால் துயரம் என்னவென்றால் போட்டிக் கல்விமுறைமையானது பாடசாலைகளின் மதிப்பை பெருமளவுக்கு குறைத்துவிட்டது. அதாவது ஆசிரியர்கள் பந்தயக்குதிரைகளைப் பழக்கும் பயிற்றுவிப்பாளர்களாகத்தான் பார்க்கப்படுகிறார்கள். கல்விமுறையின் தேவை அப்படித்தான் உள்ளது. மாறாக பரந்ததளத்தில் தனது அறிவைக்கட்டியெழுப்பி, தன்னை எப்பொழுதும் அப்டேட் செய்துகொண்டு தனது வோல்டேஜ்ஜை உயர்வாக வைத்திருக்கும் ஆசிரியர்களுக்கு இந்தக்கல்வி முறையில் எவ்வளவு தேவைஉண்டு?

தமது பிள்ளைகள் தம்மைப்போலவே ஆசிரியர்களாக வரவேண்டும் என்று ஏன் பெரும்பாலான ஆசிரியர்கள் விரும்புவதில்லை? போட்டிக் கல்வி முறைமைக்குள் ஆசிரியருக்குள்ள மதிப்பு குறைந்து போய்விட்டதுகாரணமா? அல்லது சில தனியார் கல்வி நிறுவனங்களில் வெற்றி பெற்ற, கோடீஸ்வரர்களாக உள்ள ஆசிரியர்களைவிட ஏனைய பெரும்பாலான ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் போதாது என்பதனாலா? தன்பிள்ளை தன்னைப்போல ஆசிரியராக வரவேண்டும் என்று கனவுகாணும் ஆசிரியர்களை அதிகமாகக்கொண்டிராத ஒரு கல்வி முறைமைக்குள் எது சரியான வோல்ட்டேஜ்?

இப்படிப்பட்டதோர் கல்விச்சூழலில் கடந்தவாரம் வெளிவந்த பரீட்சைமுடிவுகளில சில அரிதான புறநடைகளைத் தவிர பெரும்பாலான வெற்றிகளுக்கு தனியார் கல்விநிறுவனங்களும் காரணம். இதில் ஆசிரியரின் வோல்டேஜ் என்பது எது என்பதை போட்டிக் கல்விச்சூழல் தான் தீர்மானிக்கின்றது. பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தொகுத்துப் பார்த்தால், நமது ஆசிரியர்களின் வோல்ட்டேஜ் கவலைப்படுமளவுக்குக குறையவில்லை என்றுதான் எடுத்துக் கொள்ளப்படும். போட்டிப் பரீட்சைதான் பிரதான இலக்கு என்றால் நமது ஆசிரியர்கள் வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கல்வி முறைமையில் மாற்றத்தைச் செய்துவிட்டு புதியஅளவுகோல்களுடன் வரலாம்.

நாட்டை இப்பொழுது ஆட்சிசெய்வது மாற்றத்தை வாக்களித்து வந்த ஓர் அரசாங்கம். அதில் பிரதமராகவும் கல்வி மந்திரியாகவும் இருப்பவர், அரசாங்கத்தின் லிபரல் முகமாகக் கருதப்படும் ஹறிணி அமரசூரிய. ஆனால் அவரால் இன்றுவரை பாடசாலைகளில் ஆசிரியைகளின் ஆடை விவகாரத்தில் காணப்படும் பால் அசமத்துவத்தை நீக்க முடியவில்லை. பிள்ளைகளின் உளவியலை பாரதூரமான விதங்களில் பாதிப்பது என்று கல்வி உளவியலாளர்களால் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்ட ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையான தேசிய சித்திரவதையை நிறுத்த முடியவில்லை. இதுதான் அரசியல்சூழல் என்றால் ஆசிரியருக்கு எது பொருத்தமான வோல்டேஜ் என்பதனை போட்டிப் பரீட்சைக் கல்விமுறைமை தான் இனியும் தீர்மானிக்கும்.

## ஈரமான இதயங்களே...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிமாறுவதுவரை மாணவர்களே செய்கிறார்கள். இது அவர்களுக்கு தற்சார்பு வாழ்க்கையைக் கற்றுக் கொடுக்கிறது. ஜப்பான் நாடு சுத்தம் செய்ய கற்றுக் கொடுப்பது போல, இஸ்ரேல் நாட்டுக் கல்வி முறையில் துணிச்சல் என்ற பண்பை கற்பிக்கிறார்கள். அங்கு தவறு செய்வதோ அல்லது ஒரு முயற்சியில் தோல்வி அடைவதோ அவமானமாகக் கருதப்படுவதில்லை.

அவர்களைப்போல, நாமும் தோல்விகளைக் கண்டு துவளாமல் அவற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை நம் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும். தனிமனித முன்னேற்றத்தை விட ஒரு சமூகம் இணைந்து முன்னேறுவதே உண்மையான வளர்ச்சி. அந்தப் பெண் பார்வையற்றவருக்கு உதவியது தனிப்பட்ட செயல் அல்ல. அது ஒரு சக மனிதருக்கு ஆற்றிய கடமை. இத்தகைய கூட்டுப் பொறுப்புணர்வை நாம் மாணவர்களிடம் விதைக்க வேண்டும். கல்வி என்பது வாழ்வாதா ரத்துக்கான கருவியல்ல் அது ஒரு வாழ்க்கைமுறை. தன் தேவைகளைத் தானே கவனித்துக் கொள்வதும் ஒரு மனிதனின் அடிப்படைப் பண்பு.

கோடை விடுமுறை என்பது பிள்ளைகளுக்கு வெறும் ஓய்வுக்கான நேரம் மட்டுமல்ல. அவர்களின் ஆளுமை யைச் செதுக்குவதற்கான ஒரு பொன்னான வாய்ப்பு. இந்த விடுமுறை நாள்களைப் பயனுள்ளதாகவும் மகிழ்ச்சியான தாகவும் மாற்ற வேண்டியது பெற்றோரின் கடமை. வீட் டுவேலைகளில் அவர்களை இணைத்துக்கொண்டு சிறு சிறு வேலைகளைச் செய்யப் பழக்க வேண்டும். செடிக ளுக்கு நீர் ஊற்றுவது, வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொள்வது போன்றவற்றைச் செய்யலாம். வாழ்வியல் விழுமியங்களைக் கற்பிக்கலாம்.

ஒவ்வொரு குழந்தைக்கும் ஏதாவது ஒரு தனித் திறமை இருக்கும் அதைக் கண்டறிந்து உற்சாகப்படுத்தலாம். நம் மரபு மற்றும் கலாசாரம் பற்றிய அறிவும் தெளிவும் அவர் களுக்கு அவசியம். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தரமான நேரத்தைச் செலவிடுவது மிக மிக முக்கியம். குழந் தைகளை வெளியே அழைத்துப்போய் வெளி உலகப் பரிச்சயம் கிட்டும்படி செய்ய வேண்டும்.

மற்றவர்களுக்கு உதவும்போது பிள்ளைகளை உடன் அழைத்துச் சென்று அவர்கள் கைகளால் அவற்றைக் கொடுக்க வைக்க வேண்டும். கலைகளை அவர்கள் எந்த வயதிலும் கற்றுக் கொள்ளலாம். தற்போது நேர்மை, பணிவு, நேர மேலாண்மை, இன்சொல் பேசுதல், தூய்மை, ஒழுங்கு, பிறர் நலன் பேணுதல், சுயக் கட்டுப்பாடு ஆகியவற்றைச் சொல்லிக் கொடுப்போம்.

நேர்மையான இதயமும், உழைக்கத் தயங்காத கைக ளும், பிறர் துயர் துடைக்க நீளும் கரங்களும் கொண்ட ஒரு தலைமுறையை நாம் உருவாக்க வேண்டும். கல்வி என்பது வெறும் தகவல்களைத் திரட்டுவது அல்ல் அது தகவமைப்பைச் செதுக்குவது. அந்தச் சிறுவன் தன் தவறை ஒப்புக்கொண்டது பலமான முதுகெலும்பு; அந்தப் பெண், பார்வையற்றவரிடம் காட்டியது அன்பு, அது சக மனிதனை நேசிக்கும் இதயத் துடிப்பு. ஆகவே, மாற்றம் நம் வீட்டில் இருந்து தொடங்கட்டும். அது வகுப்பறைகளில் மலரட்டும் உன்னதமான சமுதாயமாக பரிமளிக்கட்டும்.

(தினமணி)

## நேட்டோவில் இருந்து...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரித்தானியாவிடம் எப்போதும் நல்ல நட்பு பேணும் அமெரிக்க தற்போதைய சூழலில் கடுமையாக விமர்சித் துள்ளது. நான் ஒருபோதும் நேட்டோவால் ஈர்க்கப்பட வில்லை. அவர்கள் ஒரு காகிதப்புலி என்பது எனக்கு எப் போதோ தெரியும், அது ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கும் நன்கு தெரியும் எனவும் விமர்சித்துள்ளார்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்களுக்குப் பிறகு, இந்த அமைப்பில் அமெரிக்கா உறுப்பினராக நீடிப்பது குறித்து மீண்டும் பரிசீலிப்பீர்களா என வின விய நிலையில், ஆம், அது மறுபரிசீலனைக்கும் அப்பாற் பட்டது என்று தாம் கருதுவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, நெதர்லாந்து, ஜப்பான் மற்றும் கனடா உள்ளிட்ட நாடு கள் ஹோர்முஸ் நீரிணை வழியாக பாதுகாப்பான கப்பல் போக்குவரத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தற்போது கூட்டறிக்கை வெளியிட்டன.

## பிரஜா சக்தியும் ஒரு கட்சி முறைமையில்...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட தேசிய மக்கள் சக்தி என்ற புதிய அவதாரத்தின் மூலமாகவே ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கிறது. தேசிய மக்கள் சக்திக்குள் ஜே.வி.பி. ஆதிக்கம் கொண்ட சக்தியாக விளங்குகின்ற போதிலும் கூட, ஒரு கட்சி ஆட்சி போன்ற ஜனநாயக விரோத ஏற்பாட்டைக் கொண்டு வருவதற்கான எந்தவொரு முயற்சியையும் தேசிய மக்கள் சக்திக்குள் இருக்கும் ஒப்பீட்டளவிலான லிபரல் போக்குடைய சக்திகள் ஆதரித்து ஒத்துழைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒரு அரசாங்கத்தினால், தனியொரு கட்சியினால் அல்லது தனியொரு நபரினால் இலங்கையின் ஆழமான நெருக்கடிகளைத் தீர்த்து வைக்கக்கூடியதாக இருக்காது என்று ஜனாதிபதி திசநாயக்க ஏற்கெனவே வெளிப்படையாகக் கூறியதும் பதிவில் இருக்கிறது. ஒரு கட்சி ஆட்சியை நியாயப்படுத்தக்கூடிய அல்லது ஆதரிக்கக் கூடிய ஒருவராக அவரைச் சந்தேகிப்பதற்கு இதுவரை யில் எந்தச் சான்றும் கிடையாது.

அதேவேளை, இலங்கை அரசு அடிப்படையில் இனத்துவ மேலாட்சித் தன்மையுடையதாக இருக்கின்ற போதிலும், ஆழமாக வேரூன்றிய பல கட்சி ஜனநாயக முறைமையைக் கொண்டிருப்பதால் ஒரு கட்சி ஆட்சியை நிறுவு வது என்பது சட்ட ரீதியாகவும் நடைமுறையிலும் சவால் மிக்கதாகவே இருக்கும். குறிப்பாக, தென்னிலங்கையின் அரசியல் கலாசாரம் தீவிரமான கட்சி அரசியல் போட்டியைக் கொண்டதாக இருந்து வருவதால் ஒரு கட்சி மேலாதிக்கத்தை அது அனுமதிக்கக்கூடிய சாத்தியத்தை எதிர்பார்க்க முடியாது.

சுதந்திர இலங்கை தெற்கில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளுக்கும் இன முரண்நிலையின் விளைவான சுமார் மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கும் மத்தியிலும் கிரமமாக தேர்தல்களை நடத்தியது. அத்துடன் ஆட்சியதி கார மாற்றம் அமைதியான முறையில் - அரசியலமைப்பு ரீதியாகவே இடம்பெற்று வந்திருக்கிறது.

ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரான நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக ஆட்சிமுறையில் எதேச்சாதிகாரமும் அதிகார துஷ்பிரயோகமும் படிப்படியாக அதிகரித்திருப்பதுடன் பாராளுமன்றமும் அரசியலமைப்பு ரீதியான நிறுவனங்களும் பலவீனப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டும் என்பது நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வருகின்ற போதிலும், இதுவரையில் அது சாத்தியமாகவில்லை. இந்த ஆட்சிமுறையின் பொதுவாக ஜனாதிபதிகள் எதிரணிக் கட்சிகளைப் பலவீனப்படுத்துவதில் அக்கறை காட்டி வந்திருக்கிறார்கள் என்பது அண்மைக்கால வரலாறு. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராகவும் அதே குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

ஆனால், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டிருந்த முன்னைய அரசாங்கங்களைப் போன்று தேசிய மக்கள் சக்தி தனக்கு இருக்கும் பிரமாண்டமான பாராளுமன்றப் பெரும்பான்மையை பயன்படுத்தி அதிகாரத் திமிருடன் நடந்து கொண்டதற்கான சான்று எதுவும் இதுவரையில் இல்லை.

அதேவேளை, அதிகாரப்பகிர்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் கையாளுவதில் நாட்டத்தைக் காண்பிக்காமல் இருந்து வரும் தேசிய மக்கள் சக்தி அரசாங் கம் ஒற்றையாட்சி மற்றும் மத்தியமயப்பட்ட அரசுக் கட்டமைப்பை உறுதியாக ஆதரிக்கிறது. இதனால், சிறுபான்மைச் சமூகங்கள் விசனமடைந்திருக்கின்றன என்பது உண்மை. தென்னிலங்கையில் இனவாத அடிப்படையிலான எதிர்ப்புக் கிளம்பும் என்ற அச்சத்தில் அந்த சமூகங்களின் மனக்குறைகளை போக்குவதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேசிய மக்கள் சக்தி தயங்குவது அது இனவாதத்தின் கைதியாக இருக்கிறது என்பதை வெளிக் காட்டுகிறது.

ஒரு கட்சி முறைமை என்பது தனியொரு கோட்பாட்டின் ஊடாக அதிகாரத்தைக் குவிப்பதையும் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதையும் நியாப்படுத்துவதற்காகவே புரட்சிகளுக்கு பிறகு பெரும்பாலும் நிறுவப்பட்டு வந்திருக்கிறது. இது தொடர்பாகவும் பல கட்சிகளை அடிப்படையாகக் கொண்ட பாராளுமன்ற ஜனநாயகங்களில் ஒரு கட்சி ஆட்சி முறையைக் கொண்டுவருவது சாத்தியமா என்பது குறித்தும் அடுத்த வாரம் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நம்பிக்கையில்லா பிரேரணை மீது ஏப்ரல் 10 ஆம் திகதி வாக்கெடுப்பு!

கொழும்பு, ஏப். 05

எரிசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீது எதிர்வரும் 10 ஆம் திகதி வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

இதன்போது பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் உள்ளிட்ட கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எனினும், வடக்கு, கிழக்கை மையப்படுத்தி இயங்கும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

அடுத்த பாராளுமன்ற கூட்டத் தொடரின்போதே இது தொடர்பில் அக்கட்சிகள் தீர்மானம் எடுக்கவுள்ளன.

அதேவேளை நம்பிக்கையில்லா பிரேரணைக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது குறித்து, ஆளும் தேசிய மக்கள் சக்தி இன்னும் தீர்மானம் எடுக்கவில்லை என்று, தேசிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

கட்சி இன்னும் இறுதி நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்றும், அதன் தெரிவுகளை இன்னும் பரிசீலித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்குரிய பெரும்பான்மை பலம் அரசு வசம் உள்ளது.

எனினும், நிலக்கரி மோசடி உள்ளிட்ட விடயங்களை அம்பலப்படுத்தும் நோக்கிலேயே பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சிலவேளை, விவாதத்துக்கு முன்னர் எரிசக்தி அமைச்சர் பதவி விலகுவதற்குரிய சாத்தியமும் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (அ)

## அமைதியை நோக்கிய...

உயிர்த்த ஞாயிறு என்பது ஒரு மத நிகழ்வு என்பதைத் தாண்டி, அது மனிதாபிமானம், அன்பு மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை மீண்டும் நினைவுபடுத்தும் கிறிஸ்தவர்களின் கலாசார பண்டிகையாகும்.

மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து, உறுதியான சங்கற்பமும் அர்ப்பணிப்பும் இருந்தால் இருளை வென்று ஒளியையும், பயத்தை வென்று நம்பிக்கையையும், வேதனையை வென்று நித்திய மகிழ்ச்சியையும் அடைய முடியும் என்பதைத் தமது வாழ்வின் மூலம் உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

தமக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவுக்காக ஒன்றிணைந்து நின்ற மக்கள், உலகிற்கு ஒற்றுமையின் நற்செய்தியை வழங்கினர்.

தற்போது மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக உலகெங்கிலும் உள்ள மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

பகைமையை முதன்மையாகக் கொண்டு நடத்தப்படும் போருக்குப் பதிலாக, உலக மக்கள் அனைவரும் அமைதியையும் சகவாழ்வையுமே விரும்புகின்றனர்.

இந்த உன்னதமான உயிர்த்த ஞாயிறு தினத்தில் அமைதியை நோக்கிய பாதை மலர வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் போதனைகளில் குறிப்பிட்டுள்ளவாறு, நமது இதயங்களை அன்பு, பொறுமை மற்றும் மன்னிப்பு எனும் உன்னத குணங்களால் நிரப்பி, ஒரே தாயின் பிள்ளைகளாகப் பேதங்களை மறந்து, இதயத்தால் ஒன்றிணைந்த ஒரே இலங்கை நாட்டின் குடும்பமாக முன்னோக்கிச் செல்வோம்! அதற்காகச் சகோதரத்துவத்துடன் கைகோர்ப்போம்.

துயருற்ற மக்களின் இரட்சிப்பிற்காகத் தனது உயிரையே அர்ப்பணித்த இயேசு கிறிஸ்து, சிலுவையில் அறையப்பட்டதன் பின்னர் மரணத்தின் இருளைத் தோற்கடித்து உயிர்த்தெழுந்ததை நினைவுபடுத்தும் இந்த உன்னதமான உயிர்த்த ஞாயிறு தினத்தைக் கொண்டாடும் அனைத்து இலங்கை வாழ் மற்றும் உலகவாழ் கிறிஸ்தவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என தெரிவித்துள்ளார். (அ)

## வடக்குக்கான ரயில்...

கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டன.

இந்நிலையில் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 09ஆம் திகதி முதல் ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ரயில் சேவைக்கான முற்பதிவுகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் பயணிகள் தமக்கான முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமைக்கு எதிராக இரத்தினபுரியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட மக்கள் மனுப் போராட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

உயிர்த்த தாக்குதலின் சூத்திரதாரியைப் பிடிக்கும் நாடகம் இப்போது ஆரம்பமாகியுள்ளது. பிள்ளையான் கைது செய்யப்பட்டபோது, அவர் அனைத்து உண்மைகளையும் கூறுவார் என்று அமைச்சர் ஆனந்த விஜேபால கூறினார். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. ஒரு வருடத்திற்கும் மேலாக அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கும் தொடர்பு இருப்பதாக பிள்ளையானின் வாயால் சொல்ல வைக்க அரசியல் ரீதியான பழிவாங்கல்கள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது கர்தினாலை திருப்திப்படுத்துவதற்காகவே சுரேஷ் சாலே கைது செய்யப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடந்தபோது சுரேஷ் சாலே இந்தியாவில் இருந்தார். அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர் மலேசியாவில் இருந்தார். எனவே, உண்மையான சூத்திரதாரியை நீங்கள் கண்டுபிடித்திருந்தால் அதனை நாட்டுக்கு உடனடியாக வெளிப்படுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் கோருகிறோம்-என்றார். (அ)

## ஈரானுக்கு...

கொடுத்ததை நினைவில் கொள்ளுங்கள்.

நேரம் விரைந்து கொண்டிருக்கிறது.

இன்னும் 48 மணி நேரத்தில் அவர்கள் உடன்பாட்டுக்கு வராவிட்டால் நரகத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும்" எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். (அ)

## இலங்கைக்கு ரஷ்ய...

இடையிலான போர் சூழல் மற்றும் உலக எண்ணெய் விநியோகத்தில் 20 வீத பங்களிப்பை வழங்கும் ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டமை ஆகியவற்றால் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியைத் தவிர்க்க இலங்கை அரசாங்கம் ரஷ்யாவின் உதவியை நாடியிருந்தது.

இதனை முன்னிட்டு, மார்ச் இறுதியில் ரஷ்ய எரிசக்தி பிரதி அமைச்சர் ரோமன் மார்ஷவின் மற்றும் வெளியுறவுத்துறை பிரதி அமைச்சர் ஆண்ட்ரே ருடென்கோ ஆகியோர் இலங்கைக்கு விஜயம் செய்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இதன்போது, அமெரிக்க நலன்களுக்கு அப்பாற்பட்டு இலங்கையுடன் நீண்டகால எரிசக்தி ஒத்துழைப்பை வழங்க ரஷ்யா தயாராக இருப்பதாக அவர்கள் உறுதியளித்தனர்.

இந்நிலையில், இலங்கை தனது வரலாற்றில் முதல் முறையாக அமெரிக்காவிலிருந்து மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய முன்பதிவு செய்துள்ளது.

இந்த எண்ணெய் கப்பல் எதிர்வரும் மே மாதம் நாட்டை வந்தடையும் என இலங்கை கனிம எண்ணெய் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவுடனான வர்த்தக இடைவெளியைக் குறைக்கும் நோக்கில் மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய இலங்கை தீர்மானித்துள்ளது. இதுவரை காலமும் இலங்கை அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்திடமிருந்து "முர்பன்" ரக எண்ணெய்யையே இறக்குமதி செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

## மின்சார...

புதிய முதலீடுகளை நிறுவன கட்டமைப்பின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

## போக்குவரத்து...

ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், பெலாரஸ் அரச போக்குவரத்து பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தொழில் வல்லுநர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் போக்குவரத்து நவீனமயமாக்கல் திட்டங்களுக்கு பெலாரஸின் நவீன தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உயிர்த்த...

கிழித்தெறியப்படும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரி வித்தார்.

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்திற்குட்பட்ட குருக்கள்புதுக்குளம் கிராமத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது வவுனியா மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக உரத்தின் அதிகமான விலை காரணமாகவும், அவற்றினை பெற்றுக்கொள்வதிலும் விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். இதனை கருத்திற் கொண்டு ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டு உரத்தை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு எதிர்காலத்தில் கமநல சேவை நிலையங்களின் ஊடாக விவசாயிகளுக்கு உரத்தினை வழங்குவதற்குரிய செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

அந்த வகையில் இறக்குமதி செய்யப்படும் 68 வீதமான உரத்தை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதன் ஊடாக மோசடியான விலையேற்றத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியினை எவ்வாறு மக்கள் முகம்கொடுப்பது என்பது தொடர்பாக மக்களினை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. செட்டிக்குளம் பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்கள் தோறும் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

தற்போது சமகாலத்திலே உதய கம்பன்பிலவின் புத்தக வெளியீடானது மிகவும் பேசு பொருளாக காணப்படுகின்றது. திருடர்கள் அனைவரும் ஒன்று கூடியது தொடர்பாக கருத்து கூறவேண்டிய தேவை உள்ளது. குறித்த புத்தக வெளியீட்டுக்கு சென்றவர்கள் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் காலத்தில் அமைச்சர்களாகவும், ஜனாதிபதிகளாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்தவர்களே அங்கு வருகை தந்திருந்தனர்.

குறித்த புத்தக வெளியீடானது முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைப்பு போன்று வெளிவந்துள்ளது. குறிப்பாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதலின் சூட்சுமங்களை மறைக்கின்ற அடிப்படையில் உதய கம்மன்பிலவின் புத்தக வெளியீடு காணப்படுகின்றது. குறிப்பாக ஈஸ்டர் குண்டுத்தாக்குதலிலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்பதன் அடிப்படையிலே அரசாங்கம் உறுதியாக இருப்பதுடன் அதற்குரிய விசாரணைகள் முழுமையாக இடம்பெறும்.

அத்தோடு ஈஸ்டர் குண்டுத் தாக்குதலிலே சம்மந்தப்பட்டவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். அத்தோடு எமது காலத்திலே அவர்களிற்கான தண்டனையும் சட்டத்தின் ஊடாக பெற்றுக்கொடுக்கப்படும். அத்தோடு இங்கு இங்கு ஒன்று கூடியவர்கள் அரசாங்கம் இதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை மற்றும் சரியானவர்களை இணங்கானவில்லை என்று கருத்து கூறுகின்றனர்-என்றார். (அ)

## ஈரான் இராணுவ...

ஈரானிடம் இன்னும் பாதிக்கும் மேற்பட்ட ஏவுகணை ஏவுதளங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆளில்லா விமானங்கள் எஞ்சியிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஈரானின் ஆயுதக் கிடங்குகள் பெருமளவு சிதைக்கப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய கருத்திற்கு மாறாக உளவுத் தகவல்கள் இருக்கின்றன.

அதேவேளை, தமது உண்மையான ராணுவ வலிமை எதிரி நாடுகளுக்கு சரியாக தெரியவில்லை என ஈரான் தரப்பில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தீர்வு கிடைக்காவிடின்...

தாங்கள் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்தே கடிதம் அனுப்பியுள்ளது.

அச்சங்கத்தின் தலைவர் ஷெல்டன் பெர்னாண்டோ, தங்களது கோரிக்கைகளுக்கு நாளைக்குள் உரிய பதில் வழங்கப்படாவிட்டால், பெற்றோலிய கூட்டுத்தாபனம், அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மத்திய கிழக்கு போர் நீடித்தால் இலங்கைக்கு கடும் பாதிப்புகள்!

## பேராசிரியர் டியூடர் வீரசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 05

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் தொடர்ந்து நீடித்தால், இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகள் பாரிய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என அரசியல் ஆய்வாளர் பேராசிரியர் டியூடர் வீரசிங்க எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவினால் ஈரானுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் தாக்குதல்கள் 36 நாட்களைக் கடந்துள்ள நிலையில், தற்போதைய உலகளாவிய அரசியல் நகர்வுகள் குறித்துக் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

போரில் ஈடுபட்டுள்ள நாடுகள் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான எந்தவொரு விருப்பத்தையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. இது ஆசிய பிராந்தியத்துக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

மத்திய கிழக்கு போர்ச் சூழலானது தற்போது உலகளாவிய பொருளாதார நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. இந்நிலை நீடித்தால் அது ஒரு பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

போரினால் ஏற்படும் பொருளாதாரச் சுமை காரணமாக ஆசிய நாடுகளுக்குள் மக்கள் எதிர்ப்புகள் அதிகரிக்கக்கூடும். இது உள்நாட்டு சமூக மற்றும் அரசியல் முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை போன்ற நாடுகள் ஏற்கனவே பொருளாதாரச் சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், சர்வதேச ரீதியிலான இந்தப் போர்ச் சூழல் இலங்கைக்கு மேலதிக அழுத்தங்களைக் கொடுக்கும் என அவர் மேலும் வலியுறுத்தினார். (அ)

# ஒரு வைத்தியர் உருவாக 60 இலட்சம் ரூபா செலவு!

## அமைச்சர் உபாலி பன்னிலகே

கொழும்பு, ஏப். 05

மருத்துவ பீட மாணவர் ஒருவர் ஐந்து வருடங்களின் பின் வைத்தியராக வெளியேறுவதற்கு அரசாங்கம் மிக அதிக தொகையைச் செலவிடுவதாக அமைச்சர் உபாலி பன்னிலகே தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொடையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இந்த தகவல்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் சுகாதாரத் துறையைப் பொறுத்தவரை, சுதந்திரத்திற்குப் பின்னரான அனைத்து அரசாங்கங்களும் இலவச சுகாதார சேவையை வழங்குவதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. ஒருவரின் பணப்பையிலுள்ள பணத்தை தீர்மானிக்கக் கூடாது என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில், மருத்துவபீட மாணவர் ஒருவர் ஐந்து வருடங்களின் பின் வைத்தியராக வெளியேறுவதற்கு அரசாங்கம் மிக அதிக தொகையைச் செலவிடுகிறது. ஒரு பொறியியலாளரை உருவாக்க 30 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் நிலையில், ஒரு வைத்தியரை உருவாக்க மக்கள் வரிப்பணத்திலிருந்து 60 இலட்சம் ரூபாய் செலவிடப்படுகிறது. இது பொறியியலாளருக்கான செலவை விட இரு மடங்காகும்.

தற்போது நாட்டில் 35,000 முதல் 38,000 வரையான வைத்தியர்கள் உள்ளதாகவும், அவர்களில் சுமார் 25,000 முதல் 28,000 வரையிலானோர் அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்றனர். சமூகத்தில் அவர்கள் கொண்டுள்ள விசேட பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் - என்றார். (அ)

# மருத்துவர் நியமனங்களில் திருப்பம் 96 வீதமான விண்ணப்பங்கள் தயார்

கொழும்பு, ஏப். 05

இடைக்கால பயிற்சி மருத்துவர் நியமனங்களுக்காக விண்ணப்பிக்கும் கால அவகாசம், திட்டமிட்டபடி 2026 ஏப்ரல் 04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணியுடன் நிறைவடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தமுறை இடைக்கால பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்த 453 மருத்துவர்களில், 435 பேர் நியமனங்களுக்காக முறையாக விண்ணப்பித்துள்ளனர்.

இது மொத்த எண்ணிக்கையில் 96 வீதம் ஆகும்.

மருத்துவ அதிகாரிகள் கோரியுள்ள விருப்பத் தெரிவுகள் மற்றும் அவர்களின் திறமைப் புள்ளி வரிசை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கான உள்ளீர்ப்புகள் அமையும்.

நாடு முழுவதுமுள்ள மருத்துவ சேவைத் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில், வெளிப்படையான மற்றும் விஞ்ஞானபூர்வமான முறையின் கீழ் இந்த இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் வழங்கப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் மற்றும் பணியில் இணைய வேண்டிய திகதி போன்ற விவரங்கள் விரைவில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தர்மபுரம் விபத்தில் இருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப். 05

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஏ-35 பரந்தன் முல்லைத்தீவு வீதியில் தர்மபுரம் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் இரவு 10ஆம் வீதியால் சென்று கொண்டிருந்த புல்டோசர் வாகனத்தின் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஜெரின் கனிஸ்ரன் என்ற 19 வயது இளைஞனும், தியாகராசா விக்கினேஸ்வரன் என்ற 18 வயது இளைஞனுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மருத்துவர்கள் போராட்டத்தால் நோயாளர்கள் பெரும் சிரமம்!

கொழும்பு, ஏப். 05

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், சுகாதார அமைச்சின் சட்டவிரோதமான இடமாற்றக் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் மேற்கொண்டுள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக, நோயாளர்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக, பல வைத்தியசாலைகளில் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

நோயாளிகள், முக்கியமாக வெளிநோயாளிப் பிரிவில் உள்ளவர்கள் என பொதுமக்களின் அன்றாட மருத்துவச் சேவைகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (அ)

# நெல்லியடியில் ரூ. 4 இலட்சம் பெறுமதியான போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 05

வடமராட்சி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, சுமார் 4 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட போதை மாத்திரைகளுடன் 21 வயதுடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, நேற்று வடமராட்சி பகுதியில் இந்த விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, கரணவாய் பகுதியைச் சேர்ந்த பிரபல போதைப்பொருள் வியாபாரி என அடையாளம் காணப்பட்ட இளைஞர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர்

சந்தேக நபரிடமிருந்து சட்டவிரோதமான முறையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் தற்போதைய கறுப்புச் சந்தை மதிப்பு சுமார் 4 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# சடலத்திலிருந்து தலையை வெட்டிச் சென்ற கொடூரம்!

## வவுனியாவில் அதிர்ச்சி சம்பவம்

வவுனியா, ஏப். 05

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் புதைக்கப்பட்ட சடலம் ஒன்றில் இருந்து தலையை அகற்றிச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் மூன்று மாதங்களுக்கு முன்னர் இளம் குடும்பஸ்தர் ஒருவர் அகால மரணமடைந்திருந்தார். அவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் கருப்பணிச்சான் குளம் மயானத்தில் புதைகப்பட்டிருந்தது.

தற்போது புதைக்கப்பட்ட இடத்தை மீண்டும் தோண்டி அதில் இருந்து உயிரிழந்தவரின் தலையை இனம் தெரியாத நபர்கள் அகற்றிச் சென்றுள்ளதாக அவரது பெற்றோர்கள் தெரிவித்ததுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதே பகுதியில் அண்மையில் உயிரிழந்த ஒருவரின் இறுதிச்சடங்கு மயானத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது அந்தப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வந்துள்ளது. இதனையடுத்து பொதுமக்கள் சென்று அந்த பகுதியை பார்வையிட்டுள்ளனர். அதன்பின்னரே விடயம் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக வவுனியா குற்றப்பிரிவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஹோர்முஸ் நீரிணையை கடந்த பிரான்ஸ்க்கு சொந்தமான கப்பல்

தெஹ்ரான், ஏப். 05

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நிறுவனத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்று ஹோர்முஸ் நீரிணையை வெற்றிகரமாக கடந்துள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக, வளைகுடா நாடுகளின் முக்கிய கட்டமைப்புகள் மீது ஈரானின் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. மேலும், சர்வதேச எண்ணெய் விநியோகத்தின் முக்கிய வழிப்பாதையான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர்களின் கூட்டாளிகளுக்குச் சொந்தமான கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல அனுமதியில்லை எனவும், அனுமதியின்றி செல்லும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் எனவும் ஈரான் எச்சரிக்கை விடுத்தது.

இந்த நிலையில், மால்டா நாட்டின் கொடியுடன் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சி.எம்.ஏ. சி.ஜி.எம். எனும் நிறுவனத்துக்குச் சொந்தமான சரக்கு கப்பல் ஒன்று நேற்று முன்தினம் ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து ஓமான் நாட்டுக்கு சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் தொடங்கிய பின்னர் ஹோர்முஸ் நீரிணையை பிரான்ஸ் நாட்டுடன் தொடர்புடைய சரக்கு கப்பல் ஒன்று முதன்முறையாக கடந்துள்ளது. (எ)

# மீன் விலை குறைவு

கொழும்பு, ஏப். 05

மீன்களின் விலை குறைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பேலியகொடை மத்திய மீன் சந்தை தொகுதி வியா பாரிகள் சங்கத்தின் தலைவர் ஜயசிறி விக்ரமாராச்சி இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் கடும் வெப்பமான வானிலையை அடுத்து மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்துள்ளமை மற்றும் மீன்பிடித்தல் குறைவடைந்துள்ளமை போன்றவையே இதற்கான காரணங்களாகும்.

இதன்படி, மீன் கிலோவொன்று 800 முதல் 1500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாக பேலியகொடை மத்திய மீன் சந்தை தொகுதி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media